பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 13 புதன்கிழமை (29.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 245

# வன்னி அகதிகள் மீதான கட்டுப்பாடு அவசரகால விதிகளின் கீழானதல்ல

## உயர்நீதிமன்றுக்கு அரசு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் உள்ள நலன்புரி மையங்களில் தங்கியிருக்கும் இரண்டரை லட்சத்துக்கும் அதிகமான மக்கள், அங்கு அவசரகாலச் சட்ட விதிகளின் கீழான தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

- இவ்வாறு உயர்நீதிமன்றுக்கு எழுத்து மூலம் தெரிவித்திருக்கின்றார் சட்டமா அதிபர்.

மேற்படி அகதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமையை ஆட்சேபித்து, அந்த அகதிகளை அந்த முகாம்களிலிருந்து தாங்கள் விரும்பும் இடங்களுக்கு வெளியேற அனுமதிக்குமாறு உத்தரவிடக் கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தாக்கல் செய்திருக்கிறது.

இந்த மனு எதிர்வரும் 6ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுக்கப்படவிருக்கையில், இந்த மனுவுக்கு எதிரான ஆட்சேப மனுவை அரசு சார்பில் சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார்.

இந்த மனுவின் எதிர்மனுதாரர்களான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், புனர்நிர்மாண, மீள்குடியமர்வு அமைச்சின் செயலாளர் உட்பட பலரின் சார்பில் சட்டமா அதிபர் தாக்கல்(16ஆம் பக்கம் பார்க்க)

கல்விச்சுடர்

உள்ளே

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும் இலகுவழி ஆங்கிலம்

நாளை

தரம் 5 மாணவர்களுக்கான பரீட்சை மாதிரி வினாத்தாள்

## பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க சர்வகட்சிக்குழு இறுதி அறிக்கையில் சிபார்சு

### ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் கோரப்பட்டுள்ளது

கொழும்பு, ஜூலை 29

அனைத்துக்கட்சிகளின் தெரிவுக்குழு சமர்பிக்க வுள்ள இறுதி அறிக்கையில் பொலிஸ் அதிகாரத்தை மாகாணங்களுக்கு வழங்குவதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

தெரிவுக்குழு தயாரித்துள்ள இறுதி அறிக்கையை இவ்வாரத்தில் சமர்ப்பிக்க ஜனாதிபதியிடம் அக்குழு சந்தர்ப்பம் கோரியுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் புலனாய்வு முக்கியஸ்தர் ஒருவர் கொம்பனித் தெருவில் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜூலை 29

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கியஸ்தர் ஒருவர் கொழும்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

இவர் கொழும்பு கொம்பனித் தெரு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரிடம் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து தற்கொலை தாக்குதல்களை (16ஆம் பக்கம் பார்க்க)

## திஸ்ஸ விதாரண சமர்ப்பிக்கும் அறிக்கையை குப்பைத் தொட்டியில் போட வேண்டும் - குணதாச அமரசேகரா

கொழும்பு, ஜூலை 29

சர்வகட்சிக் குழுவின் தலைவரும் அமைச்சருமான திஸ்ஸ விதாரண, ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ள தீர்வுத் திட்ட யோசனைகள் தொடர்பில் ஆராய்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்த யோசனைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குப்பைத் தொட்டியில் போட வேண்டும்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இவ்வாறு வலியுறுத்தியுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவர் ஹம்சாவின் வாகனம் இரவில் இடைமறிக்கப்பட்டு ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 29

இலங்கைக்கான துணைத்தூதுவராக சென்னையில் பணியாற்றி இடமாற்றம் பெற்றுள்ள பி.எம்.ஹம்சா திங்கட்கிழமை இரவு விருந்துபசாரமொன்றில் பங்கு பற்றி விட்டு திரும்பும் வழியில் இனந்தெரியாத குழுவொன்றினால் இடைமறிக்கப்பட்டுத் தடுக்கப்பட்டார்.

பிரிட்டனுக்கான இலங்கையின் துணைத் தூதுவராகப் பதவி உயர்வுபெற்றுச் செல்லவுள்ள ஜனாப் ஹம்சாவுக்கு ஆந்திர வர்த்தகர்கள் சங்கத்தினர் சென்னையிலுள்ள ஜிம்கானா கிளப் மண்டபத்தில் திங்கள் இரவு பிரிவுபசார விருந்து ஒன்றை அளித்தனர். அதில் கலந்து கொண்டு விட்டு தனது வாசஸ்தலத்துக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வான் படையின் தலைவர் வவுனியா முகாமில் கைதானார்

கொழும்பு, ஜூலை 29

வவுனியாவில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோர் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாமில் இருந்து புலிகளின் வான் படைப் பிரிவின் தலைவர் என கருதப்படும் ஒருவரை தமது விசேடக் குழுவொன்று கைதுசெய்துள்ளது - என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் விடுதலைப்புலிகளின் வான்படை குறித்து பல்வேறு இரகசியங்களை தற்போது வெளியிட்டு வருகிறார் எனவும் பொலிஸார் (16ஆம் பக்கம் பார்க்க)

## கரைச்சி, பூநகரிப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அடுத்த மாத நடுப்பகுதியில் மீளக் குடியமர்த்தப்படுவர்

கொழும்பு, ஜூலை 29

இடம் பெயர்ந்து வவுனியா அகதி முகாங்களில் தங்கியுள்ள மக்களில் ஒரு தொகுதியினர் கரைச்சி, பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் கீழ் உள்ள 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மீளக் குடியர்த்தப்படவுள்ளனர். கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள ஜெயந்தி நகர், புதுமுறிப்பு, கனகபுரம், கிருஷ்ணபுரம், உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு ஆகிய(16ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர்க் கந்தன் திருவிழாவுக்காக நேற்று முதல் இரவு ஊரடங்கு மேலும் ஒரு மணி நேரம் தளர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர் பெருந்திருவிழாவில் பக்தர்கள் கலந்து கொள்ள வசதியாக ஊரடங்குச் சட்டம் நேற்று முதல் மேலும் ஒரு மணி நேரத்துக்கு தளர்த்தப்பட்டுள்ளது.

நேற்று முதல் உற்சவம் பூர்த்தியடையும் அடுத்த மாதம் 22 ஆம் திகதி வரை ஊரடங்கு இரவு 12 மணி முதல் அதி காலை 4 மணி வரை நடைமுறைப்படுத் தப்படும் என்று பலாலி (16ஆம் பக்கம் பார்க்க)



வெளிச்செல்லும் அழைப்புக்களில்
1800 நிமிடங்கள் இலவசம் !

CDMA பிற்கொடுப்பனவு பக்கேஜில் செலுத்தும் தொகைக்கு உயர் இலாபம் !

1. எந்தவொரு தொலைபேசி வலையமைப்பிற்குமான வெளிச்செல்லும் அழைப்புக்கள் ரூ. 2/-. செக்கன் அடிப்படையிலான கட்டணங்கள்.
2. தெளிவான டிஜிடல் ஒலி. உரையாடலின் போது இணைப்பு துண்டிக்கப்படமாட்டாது.
3. மாதாந்தக் கட்டணம் ரூ. 300/-.

வாடிக்கையாளர் சேவை இலக்கம் 011 7 100 100

Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகர சபைத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பில் 90 வீதமானவர்கள் நேற்று பங்கேற்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்.மாநகரசபை தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்பில் தொண்ணூறு வீதமானோர் வாக்களித்துள்ளதாக யாழ்.மாவடத் தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. நேற்று மாலை வரை தொண்ணூறு வீதமானோர் தபால் மூலம் வாக்களிப்புச் செய் துள்ளனர்.

இம்முறை யாழ்.மாநகரசபைத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பிற்கு 365 பேர் தகுதி பெற்றிருந்தனர்.

அவர்களில் இதுவரை தொண்ணூறு வீதமானோர் வாக்களித்துள்ளனர்.

இதுவரை தபால் மூலம் கலந்து கொள்ளாதவர்கள் அடுத்த மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் தமது வாக்களிப்புகளை மேற்கொள்ளலாம் என்றும் அவர்மேலும் தெரிவித்தார். (1-9)

# இந்து நாகரிக, இந்து சமயபாட கருத்தரங்கு யாழ்.சென்றலில்

யாழ்ப்பாணம், ஜூலை 29

ஜி.சீ.ஈ (உயர்தர) பரீட்சை மாணவர்களுக்கென இன்று முதல் மூன்று தினங்கள் யாழ்.வலயத்தில் இடம்பெறவிருந்த இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கு அதே தினங்களில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெறவிருக்கின்றது.

கருத்தரங்கின் இடமாற்றத்தின் பிரகாரம் மாணவர்களை சமுகமளிக்குமாறு யாழ்.மேலதிக மாகாணகல்விப் பணிப்பாளர் வி.தி.செல்வரத்தினம் கேட்டுள்ளார்.

(1)

# சம்பந்தர் தலைமையில் கிழக்கு எம் பிக்கள் மாநகரசபை பிரசாரத்துக்கு வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்.மாநகரசபைத் தேர்தல் பிரசாரத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் உட்பட கிழக்கு மாகாணப் பிரதிநிதிகளும் எதிர்வரும் 3ஆம் திகதி ஈடுபடவுள்ளனர்.

தற்சமயம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பிரசாரப்பணிகளில் ஈடுபடும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன், என். சிறிகாந்தா, பத்மினி சிதம்பரநாதன், சொலமன் சிறில், இமாம், கஜேந்திரகுமார் ஆகியோருடன் அவர்கள் இணைந்து கொள்வர்.

சம்பந்தருடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைரட்ணசிங்கம், எஸ்.கனகசபை ஆகியோர் வருகின்றனர்.

எதிர்வரும் திங்கட்கிழமை, செவ்வாய்க் கிழமை, புதன்கிழமை ஆகிய மூன்று நாள்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரசாரக் கூட்டங்களில் அவர்கள் உரையாற்றவிருக்கின்றனர்.

தற்சமயம் கிராமம் கிராமமாக கருத்தரங்குகளை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்திவருகின்றனர். (1)

# அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களை சொந்த இடங்களில் குடியமர்த்துவதே எனது முதற்பணி

## ஆளுங்கட்சி வேட்பாளர் கூறுகிறார்.

யாழ்ப்பாணம், ஜூலை 29

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தும் திட்டத்துடனேயே தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியின் வேட்பாளரான ஆ.இரத்தினேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

என்னைப் பொறுத்தவரையில் பணத்துக்காகவோ அல்லது ஆசனத்திற்கு ஆசைப்பட்டோ நான் இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை. உண்மையில் எமது மக்கள் அகதி முகாம்களில் சொல்லொணாத் துயரத்தில் மூழ்கியிருக்கிறார்கள்.

நான் அங்கு சென்றுஅவர்களைப் பார்த்த போது காய்ந்து கருவாடாக உள்ளதை அவதானித்தேன். அந்தக்காட்சியைப் பார்த்து மனம் உருகிப்போனேன்.

அத்தகைய எமது உறவுகளை அவர்களது சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்தி அவர்களது சொந்த இடங்களில் சுதந்திரமாக நடமாடுவதற்கும் சுயமாக இயங்குவதற்கும் என்னாலான நவடிக்கைகளை மேற்கொள்வேன்.

அதற்காக வடக்கின் வசந்தத்தின் செயலணித் தலைவர் பஸில் ராஜபக்ஷவுடன் கதைத்துள்ளேன். அவர் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக என்னிடம் கூறியுள்ளார்.

எமது மக்களின் துயரத்தைத் துடைத்து அவர்களை அகதி முகாம்களில் இருந்து வெளிக்கொண்டுவர என்னால் முடியும். எனவே எனது கரத்தை மக்களாகிய நீங்கள் பலப்படுத்த வேண்டும் - என்றார் அவர்.

(1-9)

# பஸ் கட்டணம் உயராதாம்

கொழும்பு, ஜூலை 29

பஸ் கட்டணங்கள் தற்போதைக்கு அதிகரிக்கப்படமாட்டா என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உறுதியாகத் தெரிவித்துள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் கட்டணங்களை ஏழு வீதமாக அதிகரிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ள சூழ்நிலையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதனை நிராகரித்துள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர்கள் தாம் நினைத்த மாதிரி கண்மூடித்தனமாக கட்டணங்களை அதிகரிக்க முடியாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் எம்.ஏ.ஜிவ்ரி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர்கள் கட்டணங்களை அதிகரித்தால் அவர்களது அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்யவேண்டியிருக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# யாழ்., வவுனியா தேர்தல்களில் தமிழ்க் கூட்டமைப்பை ஆதரிக்குக

## மலையக இடதுசாரி முன்னணி வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 29

நடைபெற இருக்கும் யாழ். மாநகரசபை, வவுனியா நகர சபைத் தேர்தல்களில் தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே வாக்களிக்கவேண்டும் என்று மலையக இடதுசாரி முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது

இது குறித்து அக்கட்சி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட கொடுமைகளை நியாயப்படுத்த அரசு பல்வேறு வழிகளில் முயன்று வருகின்றது. இதில் ஒரு பகுதியாக மேற்படி தேர்தலைப் பயன்படுத்த முயல்கிறது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஜனநாயக ரீதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின்கீழ் முன்னெடுக்கப்படுவதையே மலையக இடதுசாரி முன்னணி விரும்புகிறது.

இன்றுள்ள சூழ்நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கோ, ஐக்கிய தேசியக் கட்சிக்கோ வாக்களிப்பதில் எத்தகைய நன்மையும் விளையப் போவதில்லை. இவ்விரு கட்சிகளும் இன்று பேரினவாத சக்திகளின் கீழேயே உள்ளன.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு - கிழக்கு மக்களுக்கு மாத்திரம் அல்ல தென்னிலங்கை, மலையகம் ஆகிய பகுதிகளில் உள்ள தமிழ் மக்களுக்கான விடுதலை தொடர்பாகவும் சிந்திக்கவேண்டும். இந்த நாட்டின் எல்லா தேசிய இனங்களும் ஒன்று இணைந்து ஒருமுகப்பட்டு நிற்பதன் ஊடாகவே பேரினவாதத்தை தோற்கடிக்க முடியும். எனவே, இக்காலகட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலம் பெறவேண்டும். எனவே, மேற்படி தேர்தலில் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்குமாறு மலையக இடதுசாரி முன்னணி வேண்டுகோள் விடுக்கின்றது.

# தமிழரசுக் கட்சி வேட்பாளருக்கு அச்சுறுத்தலென தேர்தல் திணைக்களம் மற்றும் கண்காணிப்பாளருக்கு முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 29

வவுனியாவில் போட்டியிடும் இலங்கைத் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் புளொட் அமைப்பினரால் மிரட்டலுக்குள்ளாகின்றனர் என்று தேர்தல் திணைக்களம் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபைத் தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடும் எஸ்.என்.ஜி. நாதன் என்பவர் தேர்தல் திணைக்களம் மற்றும் கண்காணிப்பு அமைப்புகளுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

கடந்த 24 ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பில் இறம்பைக்குளம் பகுதியில் பிரசாரத்தை மேற்கொண்டிருந்தவேளை வாகனத்தில் அங்கு வந்த 8 புளொட் உறுப்பினர்கள், குறிப்பிட்ட பகுதி தங்களுடையது என்றும் வேறு எவரும் அங்கு பிரசாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அச்சுறுத்தினர். என்னை அங்கிருந்து செல்லுமாறு மிரட்டியதுடன் எதிர்காலத்தில் அந்தப் பகுதிக்கு வந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தனர்.

இதேபோன்று திருநாவற்குளம் பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த எமது கட்சி வேட்பாளர்களும் துப்பாக்கி முனையில் புளொட் அமைப்பினரால் மிரட்டப்பட்டுள்ளனர். இது குறித்து பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடும் செல்லத்துரை சுரேந்திரன் தேர்தலிலிருந்து உடனடியாக விலக வேண்டுமென மிரட்டப்பட்டுள்ளார். (சி)

# இம்முறை மடு மாதா திருவிழாவில் 5 லட்சம் பக்தர்கள் திரள்வர்

கொழும்பு, ஜூலை 29

அடுத்த மாதம் ஆரம்பமாக இருக்கும் மடுத் தேவாலய உற்சவத்தில் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான யாத்திரிகர்கள் பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடம் நடைபெற்று முடிந்த உற்சவத்தில் கலந்துகொள்வதற்கு யுத்தச் சூழ்நிலை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக வெறும் 540 யாத்திரிகர்கள் மாத்திரம் அரசால் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

மடு தேவாலயத்தை அண்டிய காட்டுப் பிரதேசங்களிலும் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் கடந்த காலங்களில் பலத்த மோதல்கள் இடம்பெற்று வந்துள்ளன.

அரசு தற்போதைய யுத்தமற்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மடு தேவாலயத்தைத் தரிசிக்கச் செல்லும் யாத்திரிகர்கள் மீது எந்த கட்டுப்பாடுகளையும் விதிக்கமாட்டாது எனத் தெரியவருகிறது. யாத்திரிகர்களைப் பொறுத்தமட்டில் எவ்வித கட்டுப்பாடுகளும் கிடையாதென அரசு பிரகடனப் படுத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. பெருந்தெருக்கள் அமைச்சர் ரி.வி.ஏக்கநாயக்க யாத்திரிகர்களின் வசதி கருதி மடு தேவாலயத்தை அண்டிய வீதிகளைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் இப்புனர் நிர்மாண நடவடிக்கைகளுக்கு சுமார் 157 மில்லியன் ரூபா வரை செலவாகும் எனவும் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். தேவாலயத்தை அண்டிய இடங்களிலுள்ள நிலக் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் ஏற்கனவே பூர்த்தியாகி விட்டன எனவும் அரசு அறிவித்துள்ளது. மடு தேவாலயத்துக்குச் செல்வதற்கான பிரதான வீதியைத் திருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் இம்முறை யாத்திரிகர்கள் மடுமாதா உற்சவத்தில் பங்குபற்றுவார்களென நம்பப்படுகிறது.

ஓகஸ்ட் - 06 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 16 ஆம் திகதி வரையான உற்சவ காலத்தில் அப்பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருக்குமெனவும் அனைத்து யாத்திரிகர்களினதும் வாகனங்கள், உடைமைகள், ஆவணங்கள் ஆகியன மதவாச்சியில் சோதனைக்கு உட்படுத்தப்படுமெனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக ஒவ்வொரு யாத்திரிகர்களினதும் தனிப்பட்ட விவரங்கள் மதவாச்சியில் வைத்துப் பொலிஸாரால் பெற்றுக்கொள்ளப்படும் என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. (சி)

# 'வணங்காமண்' நிவாரணப் பொருள் கொழும்புத் துறைமுகத்தில் தவம்!

கொழும்பு, ஜூலை 29

மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்தவர்களுக்காக, புலம் பெயர்ந்த தமிழர்களால் 'வணங்காமண்' கப்பலில் அனுப்பிவைக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் இன்னமும் கொழும்பு துறைமுகத்தி லேயே முடங்கிக் கிடக்கின்றன என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு துறைமுகத்திலிருந்து நிவாரணப் பொருள்களை வெளியே கொண்டு வருவதற்கான உரிய ஆவணங்கள் இல்லாததாலேயே இந்த நிலை காணப்படுகிறது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திடமும் மற்றும் இந்திய செஞ்சிலுவைக் குழுவிடமும் வேண்டுகோள் விடுத்த போதிலும் உரிய ஆவணங்கள் இன்னமும் கிடைக்கவில்லையென்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர் என இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

''இலங்கை அரசு குறிப்பிட்ட நிவாரணப் பொருள்களுக்கு வரியை அறவிடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளது. எனினும், துறைமுகத்திலிருந்து பொருள்களை அகற்றுவது தாமதமாவதால் மேலதிக கட்டணங்களைச் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளோம்'' என்றும் செஞ்சிலுவைக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மேற்குலகத்தின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யுமா கொழும்பு?

இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்காவின் குடிசன, அகதிகள், புலம்பெயர்வு ஆகிய விடயங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் எரிக். பி.சுவார்ட்ஸ், இலங்கை தொடர்பாக அமெரிக்க அரசின் முக்கிய நிலைப்பாடு ஒன்றைத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் கூறிச் சென்றிருக்கின்றார். அதில் இரண்டு அம்சங்கள் கருத்தில் கொள்ளத்தக்கவை.

ஒன்று - கடந்த காலத்தைய இலங்கையின் மனிதாபிமான விடயங்கள் தொடர்பில் அமெரிக்கா குறிப்பிடத்தக்களவு கவலை கொண்டுள்ளது என்பது.

அடுத்தது - நாட்டில் நிலவும் மனிதாபிமான நெருக்கடிகள் தொடர்பில் இலங்கை முன்னெடுக்கும் அணுகுமுறைப் போக்கின் அடிப்படையிலேயே இலங்கைக்கான அமெரிக்காவின் எதிர்கால உதவிகள், ஒத்துழைப்புகள் தங்கியிருக்கும்.

வெளிப்படையாக - மேலோட்டமாக - பார்த்தால் அமெரிக்க உயரதிகாரியின் இந்தக் கூற்றில் ஆழமான அர்த்தங்கள் புலப்படாவிட்டாலும், அந்த வாசகங்களுக்கு இடையே ஆழ்ந்த கருத்துக்கள் தொக்கி நிற்பதை இராஜதந்திர வட்டாரங்கள் இலகுவாகவே உணர்ந்துகொள்ளும்.

'கடந்த காலத்தில் உங்களின் போக்கு திருப்தி தரவில்லை. எதிர்காலத்தில் உங்களைத் திருத்திக்கொண்டு சரியான பிரதிபலிப்புகளைக் காட்டினால்தான் அமெரிக்க உதவியும் ஒத்துழைப்பும் உங்களுக்குக் கிட்டும்' - என்ற செய்தியைத்தான் இப்படி நாசூக்கான வார்த்தைகளில் - நாகரிகமாக இராஜதந்திர சொல்லாடலில் - அவர் முன்வைத்திருக்கின்றார்.

இது அமெரிக்காவின் நிலைப்பாடு மட்டுமல்ல. இலங்கை தொடர்பாகப் பெரும்பாலும் மேற்குலகில் பலம்வாய்ந்த - சக்திமிக்க - தேசங்களின் கணிப்பீடும் நிலைப்பாடும் கூட இதுதான் என்று குறிப்பிடுவதில் தப்பில்லை எனலாம்.

பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற பிரதான மேற்குலக நாடுகள் பலவும் இதுபோன்ற நிலைப்பாட்டில் ஒத்திசைந்து நிற்கின்றன என்பதே உண்மையாகும்.

இலங்கைக்குப் பெரும்தொகையான கடனை (சுமார் இருபத்தியாறாயிரம் கோடி ரூபாவை) வழங்கும் தீர்மானத்தை சர்வதேச நாணய நிதியம் எடுத்தபோது, நாணய நிதிய இயக்குநர் சபையின் அந்தக் கூட்டத்தை மேற்படி மேற்குலகின் பிரதான நான்கு நாடுகளும் கூட்டாகப் புறக்கணித்தன என்பதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் மூன்று லட்சம் தமிழ் அகதிகள், இடம்பெயர்ந்தோருக்கான நலன் புரி மையங்கள் என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அரசமைப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டிய நடமாட்ட சுதந்திரம், மறுக்கப்பட்டிருக்கின்றது. உள்ளூர், சர்வதேச தொண்டர் அமைப்புகள், ஐ.நா. தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றின் பிரதிநிதிகள் கூட இந்த மக்களுக்குரிய தேவைகளை நேரடியாகக் கண்டறிந்து மேற்கொள்வதற்கு இடையூறுகள் விதிக்கப்பட்டுள்ளன. தொண்டர் அமைப்புகள் இந்த மக்களிடையே சென்று செயற்படுவதற்கு கட்டுப்பாடற்ற அனுமதி வழங்கப்படவில்லை. ஏகக் கெடுபிடிகள் தொடர்கின்றன.

அடிப்படை வசதிகள் நிறைவு செய்யப்படாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த அகதிகள் அனுபவிக்கும் சொல்லொணாத் துன்ப துயரங்கள் பெரும் மனிதப் பேரவலத்தை ஏற்படுத்தி நிற்கின்றன.

இந்த மனிதப் பேரவலத்தை நீக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் கொழும்பு அரசின் போக்கு-

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றியீட்டி விட்டதாக அறிவித்துள்ள இலங்கை அரசு, நாட்டின் சிறுபான்மையினருக்கு நீதி செய்யும் வகையில் - இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விதத்தில் - முன்னெடுக்கவிருக்கும் நல்லிணக்கத்தை நோக்கிய நடவடிக்கைகள் -

நாட்டில் ஊடக சுதந்திரம் உட்பட்ட மனித உரிமைகள் விவகாரங்களை நீதிப்படி நிலைநாட்டிப், பேணுவதில் அரசு வெளிப்படையாகக் காட்டக்கூடிய செயல்திறன் மிக்க செயற்பாடுகள் -

- இவை போன்றவற்றை எதிர்காலத்தில் உன்னிப்பாகக் கவனித்து, கணக்கிலெடுத்து, பரிசீலித்து அவற்றின் அடிப்படையிலேயே இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் தனது நிலைப்பாடு குறித்து அமெரிக்கா தீர்மானித்துச் செயற்படவுள்ளது. இதையே இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்காவின் உயரதிகாரியான சுவாட்ஸ் இங்கு இராஜதந்திர ரீதியிலான அலங்கார வார்த்தைகளில் கோடிகாட்டியிருக்கின்றார்.

தமது இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளரான அவரின் சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ, மற்றொரு சகோதரரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம, இலங்கை அரசுத் தரப்பின் சார்பில் அமெரிக்கத் தரப்போடு நெருக்கமாக உறவாடல்களைப் பேணும் நீதி அமைச்சர் மிலிந்த மொறகொட போன்றோரை சந்தித்து உரையாடியிருந்தார் அமெரிக்க உதவிச் செயலாளரான சுவாட்ஸ். இந்தச் சந்திப்புகளின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இலங்கையுடன் எதிர்காலத்தில் அமெரிக்கா ஒத்துழைப்பதில் உள்ள நிபந்தனைகள் பற்றிய விடயத்தை அவர் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

எனவே, அமெரிக்காவின் இந்த நிலைப்பாட்டை இலங்கை அரசுத் தலைமைக்கு இச்சந்திப்புகளின்போது அவர் தெளிவாக வலியுறுத்தியிருப்பார் என்றும் நம்பமுடியும்.

அமெரிக்காவின் இந்தக் கருத்தை கொழும்பு உள்வாங்குமா? மேற்குலகின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் அது நீதியாக நடந்துகொள்ளுமா?

புரிந்துகொண்டு நியாயமாகச் செயற்பட்டால் நாட்டுக்கு நல்லது; மக்கள் எல்லோரும் நல்லது.

# குடாநாட்டின் உற்பத்திகளைச் சந்தைப்படுத்த நாரஹேன் பிட்டியில் மிகப் பெரிய வர்த்தக மையம்

## விரைவில் திறக்கப்படும் என்கிறார் அமைச்சர் பந்துல

யாழ்ப்பாணம்,ஜூலை29

யாழ்ப்பாணத்தில் இருந்து காலையில் கொண்டு செல் லப்படும் உற்பத்திப் பொருள்களை பிற்பகலில் கொழும்பில் சந்தைப்படுத்துவதற்கு வசதியாக நார ஹேன்பிட்டியில் மிகப் பெரிய வர்த் தகமையம் விரைவில் திறக்கப்படும்.

இத்தகவலை வெளியிட்டார் வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் (சதொச) கிளை ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சதொச தலைவர் நளின் பெர்னாண்டோ உட்பட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த வைபவத்தில் உரையாற்றிய அமைச்சர் பந்துல மேலும் தெரிவித்தவை வருமாறு;

வட பகுதி மக்கள் பட்ட கஷ்டங்கள் தொடரக்கூடாது என்பதாலேயே இந்த மக்களுக்கான அனைத்துத் தேவைகளையும் [illegible]மாகச் செய்து தர ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதில் ஆர்வம் கொண்டுள்ளார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் கஷ்டங்களை நீக்கவும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை அதிகரிக்கவும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு வரி விதிப்புக்களைச் செய்துள்ளோம். எதிர்க்கட்சியினர் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பொருள் களுக்கு வரி விதிப்புச் செய்யக்கூடாது எனக் கூறி வருகின்றனர். இங்குள்ள மக்களின் உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும் என்பதே எங்களின் நோக்கம் நோக்கம். கடின மான முயற்சிகளை மேற்கொண்டு உழைக் கும் மக்களின் தேவைகளுக்கு உதவ வேண்டும்.

இங்குள்ள மக்களும் பொருள்களைக் கொழும்பு விலைக்குப் பெறக்கூடியதாக இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனால் ஏனைய வர்த்தக நிலையங்களிலும் நீங்கள் குறைந்த விலைக்குப் பொருள்களை வாங்கக்கூடிய வசதி ஏற்படும். இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்களை கொழும்பில் பிற்பகலிலேயே பெறக் கூடியதாக நாரஹேன்பிட்டியில் பெரிய வர்த்தக மையம் திறக்கப்படவுள்ளது.



மீனவர்களின் கஷ்டங்கள் நீங்கக் கூடியதாகவும் அவர்களது மீன்களை தென்பதிக்கு கொண்டு செல்லவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதனால் மீனவர்களின் வருமானம் அதிகரிக்கின்றது. ஏ-9 பாதை திறக் கப்பட்ட தன் மூலம் மக்களின் போக்குவரத்துக்கும் வர்த்தக பயன்பாடு களுக்கும் வழியேற்படுத்தப்பட்டுள்ளது- என்றார் அமைச்சர்.

சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பேசும்போது கூறியதாவது: நீண்ட நாள்களாக எதிர்பார்த்திருந்த ஒன்று இன்று நிறைவேறுகிறது. இதன்மூலம் மக்கள் நியாயமான விலைக்கு கொழும்பு விலைக்கே இங்கும் பொருள் களைப் பெறமுடியும். எதிர்காலத்தில் இது மேலும் விரிவுபடுத்தப்பட்டு இங்குள்ள மக்கள் தமது முக்கிய தேவைகளைக் கஷ்டமின்றிப் பெற்றுக் கொள்ளக் கூடியதான நிலையை உருவாக்குவோம். இதற்காக ஜனாதி பதிக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சருக் கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன் - என்றார். (50-9-111-224)

# மனிதாபிமான நிலைமைகள் கையாளப்படுவதைப் பொறுத்தே இலங்கையுடனான அமெரிக்க உறவு எதிர்காலத்தில் தொடரும்

## உதவி அமைச்சர் எரிக் சுவாட்ஸ் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 29

இலங்கையில் தற்பொழுது நிலவுகின்ற மனிதாபிமான நிலைமைகளை இலங்கை அரசு கையாளுகின்ற முறைகளைப் பொறுத்தே அந்த நாட்டுடனான அமெரிக்க அரசின் உறவுகளும் ஆதரவுகளும் எதிர்காலத்தில் அமைந்திருக்கும்.

இணக்கப்பாட்டுடனான அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்பதே அமெரிக்காவின் இலங்கையுடனான உரையாடல்களில் முதன்மை பெற்றிருந்த விடயமாகும்.

சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்காவின் அகதிகள் மற்றும் குடிப்பரம்பல் தொடர்பான உதவி அமைச்சர் எரிக் பி. சுவாட்ஸ் நாடு திரும்பும் முன்னர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசின் ஆதரவு மனிதாபிமான பிரச்சினைகள் எவ்வாறு அணுகப்படுகின்றன என்பதைப் பொறுத்தே அமைந்திருக்கும் என்றார் அமெரிக்க உதவி அமைச்சர்.

இணக்கப்பாடு உள்ளடங்கிய செயற்பாடுகள் இலங்கையின் சகல நட்பு நாடுகளுக்கும் முக்கியத்துவமான ஒரு விடயமாகும் என்றார் அவர்.

நான் இங்கு வந்ததன் நோக்கம் மனிதாபிமான நடவடிக்கைகளின் நிலைமைகளை ஆராய்வதற்காகும். மேலும் முனைப்பான நிவாரண நடவடிக்கைகளுக்கும், சமத்துவமான நீடித்த மீட்சிக்கு உதவுவது பற்றி ஆய்வு செய்வதும் என் நோக்கமாக இருந்தது என்றார் அமெரிக்க உதவி அமைச்சர்.

இலங்கைக்கு உதவும் அமெரிக்க நிறுவனத்தின் பணிப்பாளர் றிபெக்கா கொஹுன அம்மையார் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசும்போது தெரிவித்ததாவது:

எட்டு மில்லியன் அமெரிக்க டொலர் உதவியாக வழங்கப்படும். 30 மில்லியன் டொலர் உணவு உதவி உலக உணவுத்திட்டத்துக்கு இவ்வருடம் வழங்கப்படும்.

இந்த உதவிகள் வாழ்க்கையை மீளமைத்துக் கொள்வதற்கும், இடம்பெயர்ந்தவர்கள் விரைவாக தமது சொந்த இடங்களுக்கு செல்ல உதவுவதற்கும் பயன்படுத்தப்படும். இந்த நிதி உதவிகள் அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் மற்றும் இலங்கையில் நீண்டகாலமாகப் பணிபுரியும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் ஆதரவளிப்பதாக இருக்கும் என்றார் அவர்.

மீனவர்களுக்கு வலைகள், சிறிய படகுகளையும் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள், விதைகளையும் வழங்குவதற்கும் சிறு தொழில்களை ஆரம்பிப்பதற்கும் நாம் உதவிகளை வழங்குவோம் என்றார் றிபெக்கா அம்மையார். (ப)

# விமானப்படையின் பயணிகள் சேவைக்கான பயணச் சீட்டு வழங்கும் பணி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

இலங்கை விமானப்படையின் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான உள்ளூர் விமான சேவைக்கான பயணச்சீட்டு வழங்கும் பணிகள் யாழ்ப்பாணத்தில் இன்று புதன் கிழமை ஆரம்பமாகின்றன.

பயணச்சீட்டு வழங்கும் நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு யாழ்.சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் ஆரம்பமாகின்றதெனவும் தினமும் காலை 8 மணிமுதல் இங்கு பயணச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் விமானப்படையின் ஸ்குவாட்டரன் லீடர் அன்ராடி உதயனுக்கு தெரிவித்தார்.

இந்த விமானச்சேவையின் இருவழிப் பயணக் கட்டணமாக 19 ஆயிரத்து 100ரூபாவும் ஒரு வழிப் பயணக் கட்டணமாக 9 ஆயிரத்து 550 ரூபாவும் அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் இந்தச் சேவை நடைபெறும்.

கொழும்பில் இருந்து காலை 8 மணிக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து பிற்பகல் 3 மணிக்கும் இந்தச் சேவை நடைபெறும் எனவும் இந்த விமானத்தில் 15 பயணிகள் செல்லமுடியும் எனவும் ஸ்குவாட்ரண் லீடர் அன்ராடி மேலும் தெரிவித்தார். (50)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 14 | 30.07.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | நவமி |
| | மு.இ. 09.13 வரை |
| நட்சத்திரம்: | விசாகம் |
| | பி.இ. 01.04 வரை |
| [illegible] | 07.33 - 09.03 |
| [illegible] | 01.33 - 03.03 |

# வடமாகாணத்தில் தரிசு நிலங்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும்

## பஸில் ராஜபக்ஷ எம்.பி.தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

வடமாகாணத்தில் தரிசு நிலங்களாகக் காணப்படும் சகல காணிகளிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும். வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படவிருக்கும் இப் பயிர்ச்செய்கைக்காக விவசாயிகளுக்கு விதையினங்கள், உரவகைகள் போன்ற உள்ளீடுகளுடன் புதிதாக நெற் செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளுக்காக ஒரு ஏக்கருக்கு 4,000 ரூபா வீதம் நிதி உதவி வழங்கப் படும் எனத் தெரிவித்துள்ளார் ஜனாதி பதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சமீபத்திய நிலைமைகளைப் பரிசீலிக்கும் கூட்டத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு. முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 குளங்களை புனரமைப்புச் செய்வதற்கென அரசாங்கம் இரண்டரைக்கோடி ரூபாவினை ஒதுக்கியுள்ளது. நீர்ப்பாசன வலைப்பின்னலைத் திருத்தி அமைக்கவென 50 லட்சம் ரூபாவினை ஒதுக்கவுள்ளது - என்று தெரிவித்தார் பஸில் ராஜபக்ஷ. (50-7)

# அதிபர் நியமன மீள் பரிசீலனை நேர்முகத் திகதியில் மாற்றம்

இலங்கை அதிபர் சேவை 2-II இற்கான எழுத்துப் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்றவர்களுக்கான நேர்முகப் பரீட்சை புள்ளிகளை மீள் பரிசீலனை செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களில் இதற்கான நேர்முகப் பரீட்சைகள் கல்வி அமைச்சில் நடைபெற்று வருகின்றன. ஓகஸ்ட் 4 ஆம் திகதி அழைக்கப்பட்டிருந்த சிலருக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. மாற்றப்பட்டவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

கடிதம் கிடைத்தவர்கள் மட்டுமே 31 ஆம் திகதி செல்லவேண்டும். எனவும் மற்றவர்கள் முன்னைய அறிவித்தலை பின்பற்றவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் போராளிகளின் புனர்வாழ்வுக்கு விசேட ஆணையாளராக படை அதிகாரி

கொழும்பு, ஜூலை 29

முகாம்களில் அடையாளம் காணப்பட்டிருக்கும் சிறுவர் போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்குவதற்காக விசேட ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் என தெரிய வருகிறது.

இராணுவ உயரதிகாரி ஒருவரே குறித்த விசேட ஆணையாளர் பதவிக்கு அரசால் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறார் எனவும் மேலும் தெரிய வருகிறது.

அரச படைகளிடம் சரணடைந்து முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பொதுமக்களில் 50 ஆயிரம் பேருக்கு புலிகள் இயக்கத்துடன் தொடர்பு உள்ளது என்றும் அவர்களில் அநேகர் சிறுவர் போராளிகளெனவும் அரசு தெரிவித்துள்ளது. அடையாளம் காணப்பட்டிருக்கும் இச்சிறுவர்கள் தனியாக அடைக்கப்பட்டுள்ளார்கள் எனவும் தெரிய வருகிறது.

இவர்களுக்கு விரைவில் புனர்வாழ்வு வழங்கப்படுமென ஜனாதிபதி உட்பட அரச உயர் மட்டத்தினர் கூறி வருகின்றனர். இந்நிலையிலேயே இச்சிறுவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இராணுவ உயரதிகாரி ஒருவர் விசேட ஆணையாளராக நியமிக்கப்பட உள்ளாரென தெரிய வருகிறது. (சி)

# பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த ஆசிரியையை தள்ளி வீழ்த்தி தாலிக்கொடி அபகரிப்பு

## உடுவிலில் பட்டப்பகலில் சம்பவம்

வலி.வடக்கு, ஜூலை 29

பாடசாலையில் இருந்து திரும்பிய ஆசிரியையின் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி மோட்டார் சைக்கிளில் வந்தவர்களினால் பறித்துச் செல்லப்பட்டது.

உடுவில், அம்பலவாணர் வீதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இந்த துணிகர மான திருட்டு இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியை பஸ்ஸில் இருந்து இறங்கி தனது வீட்டிற்கு சக ஆசிரியை ஒருவருடன் சென்று கொண்டு இருந்ததாகவும் -

அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர்களை முந்திக் கொண்டு சென்று மீண்டும் திரும்பி வரும்போது ஆசிரியையைத் தள்ளி வீழ்த்தி விட்டு தாலிக் கொடியை அறுத்துக் கொண்டு தப்பி ஓடியுள்ளார்கள் என்றும் - கூறப்பட்டது.

இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிசார் விசாரணைகளை உடன் மேற்கொண்டுள்ளார்கள்.

(1-86)

# நல்லூர் பிரதேசத்தில் மீள் எழுச்சி அறிமுகம்

நல்லூர், ஜூலை 29

நல்லூர் பிரதேச ரீதியான மீள் எழுச்சித்திட்ட அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் கிராம அலுவலர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், நல்லூர் விவசாய போதனாசிரியர், பல.நோ.கூ.சங்கப் பிரதிநிதிகள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொள்வார்கள்.

(1-111)

# விசேட தேவைக்குரியவர்களை சமுகமளிக்க அழைப்பு

நவாலி, ஜூலை, 29

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சுயதொழில் முயற்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட விசேட தேவைக்குரியவர்களை அவர்களது கோரிக்கைக் கடிதத்துடன் பிரதேச செயலகத்திற்கு உடன் வருகை தருமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார்.

யா.பற்றிமா (இளவாலை), க.இராசாத்தி (ஆனைக்கோட்டை), சற்குணராசா (மாதகல்), மு.பாஸ்கரன் (சண்டிலிப்பாய்), இ.கைலாசபிள்ளை (சுதுமலை), இ.பசுபதி (கட்டுடை), நா.லோகேஸ்வரன் (மாசியப்பிட்டி), ச.விமலச்சந்திரன் ( மாதகல்), செ.பரஞ்சோதி (நவாலி), ர.சுஜாத்தா (சுதுமலை) ஆகியோரே அழைக்கப்பட்டுள்ளனர்.

(1-100)


**கோழிக் குஞ்சு விற்பனைக்கு**

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் விற்னைக்குண்டு.

ராஜீவ் ஆவைக்கோட்டைச் சந்தி 021-222 2867


**தவறிவிட்டது**

யா.ஒட்டுமடம் சோதனைச் சாவடிக்கும் யாழ்.சிற்றூர்தி தரிப்பிடத்திற்கும் (நகரப்பகுதி) இடையில் மார்புப்பதக்கம் சங்கிலியுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0776969489, 0778445853

**தவறிவிட்டது**

புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சூரியகுமார் கபூரன் என்பவரது தே. அ. அட்டை (892851719V) உரும்பிராய் சந்திக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்

தொடர்பு -சூ.கபூரன்,

பொற்பதி றோட், கோண்டாவில் கிழக்கு 0779232584

# மரண அறிவித்தல்கள்

## *சிற்றம்பலம் விமலராஜா*

மற்ஸ் சென்ரர் (MATHS CENTRE) நிர்வாகி சிற்றம்பலம் விமலராஜா (விமலன் ஆசிரியர்) நேற்று (28.07.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டித்தறை வீதி,*
*நெல்லியடி.*

*தகவல்:*
ஐ.உமாபதி.

## திருமதி பத்மாவதி கணேசன் (கிச்சி) [காரைநகர்]

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பு, கொச்சிக்கடையில் வசித்தவரும் தற்பொழுது கனடாவில் வாழ்ந்து வந்தவருமான திருமதி பத்மாவதி கணேசன் நேற்று (28.07.2009) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காரைநகர், தங்கோடையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி திருச்சிற்றம்பலம் (ஓய்வுபெற்ற பிரதம சிறாப்பர், இலங்கை திறைசேரி) தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி தேர்க்கார கந்தையா (பிரபல வர்த்தகர், கொச்சிக்கடை) தம்பதியினரின் மருமகளும் சி.க.கணேசனின் (முன்னாள் பிரபல வர்த்தகர் - கொச்சிக்கடை , கணேசன் பேக்கரி, கணேசன் தோட்ட உரிமையாளர், காரைநகர் வாரிவளவு கற்பகப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா உபயகாரர்) அன்பு மனைவியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
குடும்பத்தினர்
(தேர்க்காரன் வீடு, வாரிவளவு, காரைநகர்.)

*கனடா தொலைபேசி*
*1-9056158327* (87396)




மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளையின் நல்லூர் உற்சவகால கருமபீடம் ஆரம்ப வைபவத்தில் வங்கியின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் செல்வி கே.சுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் கிளை முகாமையாளர் ரி.சிவக்குமாரன் உட்பட வங்கி உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். (1)

# படை விட்டோடிகளை இனி என்ன செய்யலாம்?

## அரச உயர்மட்டம் தீவிரமாக ஆராய்கிறது

ஜூலை 29

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்று மறைந்து வாழ்பவர்கள் சம்பந்தமாக என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது என அரசின் உயர் மட்டத்தில் ஆராயப்படுகிறது.

நீதி மற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும், பாதுகாப்பு செயலாளர் கோதாபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் இது தொடர்பாக பேச்சுக்கள் இடம் பெற்று வருகின்றன என்று தெரிய வருகிறது.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்று மறைந்து வாழ்பவர்களின் எண்ணிக்கை சுமார் 65 ஆயிரம் ஆகஇருக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த இராணுவ விட்டோடிகளுக்கு கடந்த வாரம் ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கிருப்பதன் மூலம் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்று வெளியில் மறைந்து வாழும் சுமார் 65 ஆயிரம் பேருக்கும் நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்தியிருப்பதாகவும் நம்பப்படுகிறது.

(அ-சி)


அங்கீகரிக்கப்பட்ட கணினி டிப்ளோமா சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகள்

Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Page Designing
Internet and E-mail
Java
Dip. in Computerized Accounting
#Quick Books # Accpack # MYOB
JOIN WITH LEADERS IN ACCOUNTS
Tally Accounting Training
Advanced Video Editing
Dip. in Video Editing & Multimedia
Adobe Premiere Pro CS3, ParticleIllusion, Pinnacle Studio, COOL 3D Studio, Adobe After Effects, Nuendo,
Duration 1 Month
100%
முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு
புதிய பிரிவுகள் ஆரம்பம்.

DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel: 021-222 4403



COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250
80% off

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் - 2009


| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 3 Months ~~2500/=~~ | Diploma in Desktop Publishing 4 Months ~~15000/=~~ 3000/= | Diploma in Web page Designing 3 Months ~~15750/=~~ 3150/= |
| Diploma in Graphic Publishing 4 Months ~~15750/=~~ 3150/= | Diploma in Hardware Engineering 3 Months ~~15000/=~~ 3000/= | Diploma in AutoCAD 3 Months ~~15000/=~~ 3000/= |
| Accounting Package (Quick Book) 3 Months ~~15750/=~~ 3150/= | Diploma in Computer Science 4 Months ~~15750/=~~ 3150/= | Honors Diploma in Computer Science 4 Months ~~18000/=~~ 3600/= |

50% Off
ADVANCE COURSES
Diploma in Video Editing 4250/=
Diploma in Multimedia 3750/=

computer express ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடைபெறும், சர்வதேச அங்கீகாரம் வாய்ந்த சான்றிதழ்கள், வரையறையற்ற செய்முறைப்பயிற்சி

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch
I : 01/08/2009 10AM/2PM
II : 02/08/2009 10AM/2PM
III: 05/08/2009 9AM/2PM
IV : 07/08/2009 9AM/2PM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள வின்சர் கட்டடத்தில் நேற்று சதொச விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன, சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் சதொச விற்பனை நிலைய அதிகாரிகளால் வரவேற்கப்படுவதையும், சதொச நிலையத்தை வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன திறந்துவைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும், மதகுருமார்கள் ஆசியுரை வழங்குவதையும் அமைச்சர்கள் பொருள்கள் கொள்வனவு செய்வதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு பௌதீக வளங்களைத் தந்துதவுக

## அமைச்சர் டக்ளஸிடம் அதிபர் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஜூலை 29

கல்வி உட்பட சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்துவரும் எமது பாடசாலையில் பௌதீக வளங்களுக்குப் பற்றாக்குறை காணப்படுவதனால் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தடங்கல் ஏற்பட்டுள்ளது. எனவே, மாணவர்களின் முன்னேற்றம் கருதி பௌதீக வளங்களைத் தந்துதவுமாறு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கோரியுள்ளார்.

கல்லூரி அதிபர் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு -

வாழ்வதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள சண்டிலிப்பாய் கிராமத்தில் அமைந்துள்ள எமது பாடசாலையில் 1100 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இணைப்பாடவிதான செயற்பாடுகளின் வளர்ச்சியினால் எமது கல்லூரி கல்வித் தரத்தில் முன்னணியில் நிற்கிறது. பல்கலைக்கழக அனுமதி உட்பட விளையாட்டுத்துறையில் மாகாண மட்டத்தில் முன்னணியில் நிற்பதுடன் தேசிய மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளது. தமிழ்த் தினப் போட்டிகளிலும் மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் எமது பாடசாலைக்கு பல்வேறு தேவைகள் இருப்பதனால் கல்லூரியின் வளர்ச்சியில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தள வேலைகள் மட்டும் நிறைவு செய்யப்பட்ட நிலையிலுள்ள மாடிக்கட்டடத்தின் மேல் வேலைகள் பூர்த்தி அடையாமல் இருப்பதனால் வகுப்பறைகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இது மட்டுமன்றி பிரார்த்தனை மண்டபம், நூலகக் கட்டடம் இல்லாமையும் ஒரு குறையாகவே உள்ளது. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான மனையியல் வகுப்பறை, அழகியல், தொழில்நுட்பப் பாடங்களுக்கான செயற்பாட்டு அறை போன்ற வசதிகள் இல்லாததனால் மாணவர்களின் வளர்ச்சிக்குப் பெரும் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே வாழ்வாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு எமது பாடசாலைக்குத் தேவையான பௌதீக வளங்களைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (04-115)

# தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

நாவற்குழி, ஜூலை29

சமூக நலத்துறைத் திணைக்களத்தினால் சுன்னாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாற்று ஆற்றலுள்ளோர் தொழிற்பயிற்சி நிலையத்தில் வாய்பேச முடியாத மற்றும் செவிப்புலன் இழந்தோருக்காக நடத்தப்படவுள்ள வீட்டு மின் பாவனைப் பொருள் திருத்தப் பயிற்சி நெறியில் பயிற்றுவிப்பாளருக்கும் பயிலுநருக்குமிடையில் சைகை மொழிப் பெயர்ப்பாளராக கடமையாற்றுவதற்கு பேச்சாற்றலும் சைகை மொழித் தேர்ச்சியுமுள்ளவர்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிக்கு தகைமையுடையோர் தமது சுய விவரங்களுடன் மாவட்ட அலுவலர், சமூக நலத்துறைத் திணைக்களம், இல.48, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தமது விண்ணப்பங்களை உடனடியாக அனுபலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-288)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் வீதி விபத்தில் காயம்

வண்ணை, ஜூலை29

ஒழுங்கையால் திடீரென வந்த சைக்கிள் பிரதான வீதியால் மூன்று பிள்ளைகளுடன் கணவன், மனைவி உட்பட ஐந்துபேர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்கு உள்ளானதில் நான்கு பேர்கள் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கைக்குழந்தை ஒன்று எந்தவித காயங்களும் இல்லாமல் தப்பிக் கொண்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கொக்குவில் அரச மருந்தகத்திற்கு சமீபமாக ஆத்திசூடி வீதியில் மேற்படி சம்பவம் நடைபெற்றது.

மானிப்பாய் வடக்கு, மெமோறியல் வீதியைச் சேர்ந்த கதாகரன் (வயது 29), கஜி (வயது 27), பிள்ளைகளான யோணகான் (வயது 10), அகாஸ் (வயது 04) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

ஒன்றரை வயது அக்சான் என்னும் கைக்குழந்தை காயங்கள் எதுவும் இல்லாமல் தப்பிக்கொண்டது.

யாழ்.மருத்துவபீட முதலுதவிப் பிரிவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து காயமடைந்தவர்களுக்கு முதலுதவி வழங்கினர்.

இவர்களில் அகாஸ் (வயது 04) என்னும் சிறுவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளும் முன் பகுதி சேதமடைந்துள்ளது. (50-160)

# கால்நடை வளர்ப்போர் சங்கத்துக்கு உபகரணத் தொகுதி அன்பளிப்பு

## 'லாண்ட் ஓ லேக்' நிறுவனம் வழங்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 29

கோப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பால் விற்பனை நிலையத்துக்கு 'லாண்ட் ஓ லேக்' நிறுவனம் உபகரணங்கள் சிலவற்றை அன்பளிப்பாக விநியோகித்துள்ளது என்று சங்கத்தின் தலைவர் கே.சிவபாலன் தெரிவித்துள்ளார்.

பால் சூடாக்கும் இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி, பால் அளக்கும் கொள்கலன்கள், சில்வர் வாளிகள், அளவு கருவிகள் உட்பட மற்றும் சில உபகரணங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மேற்படி சங்கம் தினமும் 200 லீற்றருக்கும் மேற்பட்ட பசுப்பாலை இப்பிரதேச மக்களுக்கு விநியோகித்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை பசுப்பாலின் தேவையும் இப்பிரதேசத்தில் அதிகரித்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (04-224)

# 'டொல்பின்' மோதி இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

டொல்பின் வானும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 5.30 மணியளவில் யாழ்ப்பாணம், கச்சேரி- நல்லூர் வீதிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொக்குவில், பிரம்படி வீதியைச் சேர்ந்த ப.சத்தியசீலன் (வயது 35) என்பவரே படுகாயமடைந்தவராவர்.

இவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

டொல்பின் வான் இவரை மோதிவிட்டு தப்பிச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர் அயலவர்களின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (78)

# யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் முகாமைத்துவ உதவியாளர் பற்றாக்குறை

வலி.வடக்கு, ஜூலை 29

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான 36 வெற்றிடங்கள் காணப்படுவதாக மேலதிக மாகாண கல்வித் திணைக்களம் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாணம், வலிகாமம் கல்வி வலயங்களில் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படாத போதிலும் வடமராட்சி கல்வி வலயத்தில் 36 பேருக்கு அனுமதி இருந்தும் 27 பேர் மட்டுமே கடமையாற்றுவதினால் அங்கு 09 வெற்றிடங்களும் தென்மராட்சி கல்வி வலயத்தில் 35 பேருக்கு அனுமதி இருந்தும் 20 பேர் கடமையாற்றுவதனால் அங்கு 15 வெற்றிடங்களும் தீவகக் கல்வி வலயத்தில் 28 பேருக்கு அனுமதி இருந்த போதிலும் 16 பேர் கடமையாற்றுவதனால் அங்கு 12 வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

குறிப்பிட்ட மூன்று கல்வி வலயங்களினதும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கு காணப்படும் பற்றாக்குறை காரணமாக கடமைகளை முழுமைப்படுத்த முடியாத நிலைமை காணப்படுவதாக வலயக் கல்வி அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள்.

வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் இவ்வெற்றிடங்கள் விரைவாக நிரப்பப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (04-86)


# தென்மராட்சிப் பிரதேசத்தில் மின்வெட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 29

தென்மராட்சிப் பிரதேசத்தில் சில தினங்களாகக் காலையில் 5 மணி நேரம் மின்வெட்டு இடம்பெறுகின்றது.

காலை 6 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை மின்தடை ஏற்படுகிறது.

இதனால் பிரதேசத்தில் உள்ள அலுவலகங்கள் போதிய வெளிச்சமின்றியும் அலுவலக கணனிகள் இயங்க முடியாத நிலையிலும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.(201-207)




யாழ்ப்பாணம், ஜூலை29

தெல்லிப்பழை மேற்கு பன்னாலையம்பதி சிவனடியார் தொண்டர் மடாலயத்தில் மட ஸ்தாபகர் வீ.இளையதம்பியின் திருவுருவப்படம் திரைநீக்க விழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அஷ்டோத்திர (108) சங்காபிஷேகமும், சுந்தரமூர்த்தி நாயனார் சுவாமிகளின் குருபூசை ஆகிய நிகழ்வுகள் நடைபெறும். (201)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை29

கொக்குவில், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் வரலட்சுமி விரதத் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு அம்பாளுக்கு விசேட அபிசேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு பூசைகளைத் தொடர்ந்து வரலட்சுமி காப்பு வழங்கும் நிகழ்வு இடம்பெறும். (201)


# நவாலி பொது மண்டபத்தை திருத்தியமைக்குமாறு கோரிக்கை

நவாலி, ஜூலை29

நவாலி தெற்கில் J/136 கிராமசேவையாளர் பிரிவில் நியாப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பொதுமண்டபமொன்று மக்கள் பாவிக்காத நிலையில் பாழடைந்து காணப்படுகின்றது.

நவாலி களைஓடை அம்மன் ஆலயத்திற்கு செல்லும் வீதியின் அருகாமையிலுள்ள காணியில் கடந்த 1993ஆம் ஆண்டு நியாப் திட்டத்தில் அமைக்கப்பட்டது.

தற்போது இம்மண்டபம் பற்றைகளால் சூழப்பட்ட நிலையில் ஆடு, மாடுகளின் வசிப்பிடமாகக் காணமுடிகின்றது.




நாளுக்கு நாள் பாழடைந்து போகும் இம்மண்டபத்தை மேலும் மேலும் பாழடையாது காக்க சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (201-100)

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் தொழிற் பயிற்சி

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வெல்டிங், மரப்பொறியியல், அலுமினியக் கட்டுமானம், வெளியக இயந்திர இணைப்பு திருத்தம், சிமெந்துக் கட்டுமானம் போன்ற கற்கை நெறிகளுக்கு புதிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பங்களை மாவட்ட இணைப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, இல. 375, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஏற்கனவே கற்கை நெறிகளைக் கற்று வெளியேறிய பொறியியல் கட்டுமான பயிலுநர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழிகாட்டல் தொடர்பாக இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் தொடர்பு கொள்ளலாம் என தொழிற்பயிற்சி அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் அறிவித்துள்ளார். (50-201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் சேதமடைந்த பாடசாலைகள் யாவும் புனரமைக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்

## கல்வியமைச்சர் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு உறுதிமொழி

கொழும்பு, ஜூலை 28

வடக்கில் பாதிக்கப்பட்ட அனைத்துக் கல்விக்கூடங்களும் புனரமைக்கப்படும். அத்தோடு மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்கள் ஆகியோரின் துயரங்கள் வெகுவிரைவில் நீங்கும்.

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க தூதுக் குழுவுடன் இடம்பெற்ற பேச்சின் போதே அவர் இப்படிக் கூறினார்.

கல்வி அமைச்சில் நடந்த சந்திப்பில் சங்கத்தின் செயற்குழுவின் தலைவர் நா.இராஜநாதன், பொதுச்செயலாளர் த.மகாசிவம், துணைப்பொதுச் செயலாளர் மு.அருண்கிரிநாதன், நிதிச்செயலாளர் சரா.புவனேஸ்வரன், நிர்வாகச் செயலாளர் தி.கணேசராஜா, மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் மு.தயானந்தன், மன்னார் மாவட்டச் செயலாளர் ஏ. மடுத்தீன் ஆகியோர் அங்கம் வகித்த குழுவிடம் அமைச்சர் பின்வரும் உறுதிமொழிகளை வழங்கினார். அமைச்சரோடு, அமைச்சரின் செயலாளர், மேலதிக செயலாளர்கள், தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர், கிழக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

அமைச்சருடனான சந்திப்பில் வன்னிப் பிரதேச மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரது நலன்கள் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டது. முகாமில் உள்ளவர்களை வெகுவிரைவில் உரிய இடங்களில் குடியமர்த்துவது என்றும், கற்றல் செயற்பாடுகளை துரிதகதியில் ஆரம்பிப்பதென்றும் அதற்கு முன்னோடியாக உடனடியாக நாற்பது வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் முகாமில் உள்ள கல்விப்பணிப்பாளர்கள் விடுவிக்கப்பட்டு அவர்களின் கடமைகளை உடனடியாகப் பொறுப்பேற்பார்கள் என்றும் அதற்கான சகல நடவடிக்கைகளை தான் எடுத்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அத்தோடு அதிபர், ஆசிரியர்கள், கல்வியியலாளர்களின் சம்பள முரண்பாடுகள் வெகு விரைவில் தீர்த்து வைக்கப்படும் என்றும், கல்வி நிர்வாக சேவையிலும், ஆசிரிய கல்வியியலாளர் சேவையிலும் உள்ள வெற்றிடங்கள் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் ஆசிரிய கலாசாலைகளிலும் கல்வியற் கல்லூரிகளிலும் உள்ள இணைக்கப்பட்ட விரிவுரையாளர்கள் வெகுவிரைவில் அந்தந்த சேவைகளில் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்றும், வன்னிப் பிரதேசங்களில் அழிவுற்ற பாடசாலைகளில் மாணவர் பெறுபேற்றுப் பத்திரங்கள் மீளவும் வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார். அதற்கான பணிப்புரையை உடனேயே பரீட்சை ஆணையாளருக்கு வழங்கினார்.

அத்தோடு மரணமடைந்த, ஊனமுற்ற ஆசிரியருக்கான கொடுப்பனவுகள் பற்றியும் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டு இணக்கப்பாடான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. நலன்புரி முகாமில் உள்ள ஆசிரியர்கள் தாங்கள் விரும்பும் பிரதேசங்களில் கடமையாற்ற அனுமதிக்க வேண்டுமென்ற சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் அது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்து அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் உறுதி அளித்தார்.

தற்போது வழங்கப்பட்டுள்ள ஆசிரிய உதவியாளர்களுக்கான நியமனத்தில் மாதாந்தக் கொடுப்பனவு ஆசிரியர் அந்தஸ்துக்கே போதாது என்ற சங்கப் பொதுச் செயலாளரின் கருத்தை ஏற்றுக் கொண்ட அமைச்சர் அதனை இரண்டு மடங்காக அதிகரித்து வழங்க முடியும் என உறுதி அளித்தார். அத்தோடு யாழ்.மாவட்டத்தில் வழங்கப்படாதுள்ள ஆசிரிய உதவியாளர் நியமனம் மாநகராட்சி மன்ற தேர்தலுக்குப் பின்னர் வழங்கப்படும் என்றும் யாழ்ப்பாணம் தீவக வலயத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் கஷ்டப் பிரதேசப்படி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அமைச்சரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதனுடன் தொடர்புடைய பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்துவதாக உறுதியளித்தார்.

இதில் கருத்து வெளியிட்ட அமைச்சர் கல்விச் செயற்பாடுகளுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தொடர்ந்தும் தமது ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்றும் அவசியமற்ற தொழிற் சங்கப் பகிஷ்கரிப்புக்களை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் நிதானத்துடன் வழிப்படுத்துகின்றது என்றும், மாணவர் நலன்களில் சங்கம் கொண்டுள்ள பற்றுதல்களையும் வெகுவாகப் பாராட்டினார். அத்தோடு தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பாகப் போரினால் பாதிக்கப்பட்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்காக வழங்கப்படவுள்ள நிவாரண உதவிகளை நேரில் சென்று வழங்குவதற்கும் சம்மதம் தெரிவித்தார். (1)

# சுந்தரமூர்த்திநாயனாரின் குருபூசை தின நிகழ்வுகள்

சுழிபுரம்,ஜூலை29

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் சுந்தரமூர்த்திநாயனார் சுவாமிகளின் குருபூசை நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. புராண படனம், நாயனார் அருளிச் செய்த பதிகங்கள் ஓதுதல், பூசை வழிபாடுகள் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும். (201- 28)

* * *

சுன்னாகம், ஜூலை29

சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் படித்துப் பயன் சொல்லல் நிகழ்வு இன்று புதன்கிழமை மு.ப. 10மணிக்கு அராலியிலுள்ள சிதம்பர அம்பலவாண சுவாமி மானா முதலியார் மடாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து விசேட அபிஷேகமும் மகேஸ்வர பூஜையும் இடம்பெறும். (1- 38)

* * *

சுழிபுரம்,ஜூலை29

சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் இன்று புதன்கிழமை பி.ப. 2மணிக்கு சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (1)

யாழ்ப்பாணம்,ஜூலை29

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தீவகப் பிரதேசத்துக்கான சுந்தரமூர்த்தி நாயனார் சுவாமிகளின் குருபூசை நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் எஸ். உதயபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நாகேஸ்வரி மகா வித்தியாலய ஓய்வு பெற்ற அதிபர் கு. கணேசலிங்கம் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் சுந்தரமூர்த்தி நாயனாரின் அற்புதங்கள் என்னும் தலைப்பில் கு.பாலசண்முகனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (201)

# நன்றி தெரிவிக்கின்றோம்



கொழும்புத்துறை நெடுங்குளம் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கியமைக்காக சமூக சேவைக்ள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்

கௌரவ உயர்திரு.

K.N. டக்ளஸ் தேவானந்தா

மற்றும் யாழ்.மாவட்ட உறுப்பினர் தோழர் றீகன் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

நெடுங்குளம் கிராம மக்கள்.

(87389)

# ஒளிப்பேழை விற்பனைக்கு

தமிழன் தொலைக்காட்சியில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6.30 மணிக்கு இதுவரை ஒளிபரப்பான டாக்டர் பஸ்லுர் ரஹ்மானின் முக்கிய மருத்துவக் குறிப்புகளின் தொகுப்பு ஒளிப்பேழையாக 03.08.2009 திங்கட்கிழமை முதல் விற்பனைக்கு வருகின்றது.

இதில் நீரிழிவு, இரத்தக் கொதிப்பு, சிறுநீரக நோய்கள், கொலஸ்ட்ரோல் மற்றும் பல நோய்கள் பற்றிய இதுவரை வெளிவராத பல உண்மைகளும் சிகிச்சை முறைகளும் அடங்கியிருக்கின்றன.

வாங்கிப் பார்த்துப் பலனடையுங்கள்.

முக்கிய குறிப்பு: தமிழன் தொலைக்காட்சி ஒளிபரப்பு தொடர்ந்து மேற்குறிப்பிட்ட நாளில் ஒளிபரப்பாகின்றது.

ஒளிப்பேழை கிடைக்குமிடம்

பூபாலசிங்கம் புத்தகசாலை

பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(சி/559939) டாக்டர் ரகுராம், உரும்பிராய்.

# யாழ். மாநகரசபைத் தேர்தல்-08.08.2009


அன்புக்குரிய யாழ்.மாநகர வாக்காளப் பெருமக்களே,

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் (தமிழ் தேசியக் கூட்டமைப்பு) வேட்பாளராகப் போட்டியிடும்

**திரு.கார்த்திகேசு பீதாம்பரம்**


ஆகிய என்னை வெற்றி பெறச் செய்யுமாறு தயவுடன் வேண்டுகின்றேன்.

11 வீட்டுச் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு கார்த்திகேசு பீதாம்பரம் இலக்கம் 11க்கும் வாக்களித்து என்னை வெற்றிபெறச் செய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.



**கார்த்திகேசு பீதாம்பரம் J.P.**

(முன்னாள் உதவி அரச அதிபர்)



இலக்கம் 11.

# சேவைநலன் பாராட்டு

## திரு. வைத்திலிங்கம் ஸ்ரீஸ்கந்தவரோதயன்



மூன்று தசாப்தங்களைக் கடந்த சேவையை
முழு மன நிறைவுடன் திறம்பட ஆற்றி
அகவையின் அழைப்பால் ஓய்வினை நாடிய
அரிய சேவையாளனே வாழ்க!

இலங்கை வங்கி, சங்கானை விரிவாக்கற் கிளையில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி 01.06.2009 அன்று ஓய்வுபெற்ற திரு.வைத்திலிங்கம் ஸ்ரீஸ்கந்தவரோதயன் அவர்களின் வங்கிச் சேவையை நினைவு கூர்ந்து பாராட்டுவதுடன், அவரின் ஓய்வுக்காலாம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

## திரு.பரமசாமி சிவசுப்பிரமணியம்



இளவாலை ஊரின் புத்திரனே!
இலங்கை வங்கியின் காவலனே!
இருபத்தேழு வருட சேவையை
இனிதே நிறைந்து வாழ்த்துகின்றோம்.

இலங்கை வங்கி, மானிப்பாய் மேற்தரக்கிளையில் கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி 16.06.2009 அன்று ஓய்வு பெற்ற திரு.பரமசாமி சிவசுப்பிரமணியம் அவர்களின் வங்கிச் சேவையை நினைவு கூர்ந்து பாராட்டுவதுடன், அவரின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்
இலங்கை வங்கி, மானிப்பாய், சங்கானை விரிவாக்கற் கிளை.

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 10✱07✱1940 உதிர்வு 09✱08✱2008

## அமரர் பேரம்பலம் பாலசுப்பிரமணியம்

திதி: பூர்வபக்க அட்டமி

என்றும் எமக்குள் நினைவாக வாழும்
எங்கள் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

விளானை, களபூமி, காரைநகர்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(87383)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அராலி மக்களின் பேருந்துப் பயணம்

**மக்கள் மன்றம்**

அராலி வடக்கு சுமார் 3000 வாக்காளர்களைக் கொண்டதும் 5000இற்கு மேற்பட்ட குடிமக்களைக் கொண்டதுமான பகுதியாகும். இக்கிராமம் பல தசாப்தமாக அரசியல் வாதிகளாலும் அரச திணைக்களங்களாலும் ஏதோ காரணத்திற்காகப் புறக்கணிக்கப் பட்டு வந்துள்ளது. இங்குள்ள பாடசாலையில் உயர்தர வகுப்பின்மையால் 50இற்கு மேற் பட்ட மாணவர்கள் யாழ். இந்துக் கல்லூரி,யாழ். மத்தியகல்லூரி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி போன்றவற்றில் கல்வி கற்கின்றனர். அதேநேரம் 50இற்கு மேற்பட்ட மாண வர்கள் யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டு. இந்து, வட்டு. மத்தி, சுழிபுரம் விக்ரோரியாவிலும் கல்வி கற்கின்றனர். இது மாத்திரமல்ல 100இற்கு மேற்பட்ட யுவதிகளும் இளைஞர்களும் யாழ்ப்பாணக் கடைகள், அங்காடிகளில் வேலை செய்ய தினம் யாழ்ப்பாணம் காலையில் சென்று மாலையில் வீடு திரும்புகின்றனர். அப்படியே அரச ஊழியர்களும் ஆசிரியர்களும்.

ஆனால் வடக்கு அராலியைச் சுற்றவுள்ள பிரதேசமான தெற்கு அராலி, மேற்கு அராலி, வட்டுக்கோட்டைக்கு 789 பேருந்து ஒவ்வோர் அரை மணித்தியாலத்துக்கு ஒருமுறை அராலிப் பால மூடாகப் போய் வருவதையும் மறுபுறத்தே ஆனைக்கோட்டை, நவாலி, துணைவி, சங்கரத்தை, வட்டுக்கோட்டையூடாக 786 பேருந்து அரைமணிக் கொருமுறை போய் வருவதையும் கண்கூடாகக் காணலாம்.

ஆனால் வடக்கு அராலியால் வரும் பேருந்து 785 ஒவ்வொரு4 மணித்தியாலத்துக்கு ஒரு முறையே ஓடும். அதாவது காலை 8மணி மதியம் 12மணி மாலை 4மணிக்கே ஓடும், காலை 7.30க்கு காரைநகரிலிருந்து புறப் படும் பேருந்து 785 காரைநகர், பொன்னாலை, மூளாய், சுழிபுரம், சித்தங்கேணி, வட்டுக் கோட்டை பயணிகளையேற்றிக் கொண்டு வடக்கு அராலி செட்டியாமடம் வரை பயணிகள் நெருக்குப்பட்டே வருவார்கள், செட்டியா மடம், மதவடி, சேச்சடி, மடத்தடி யென சுமார் 100 பேர் ஏற பேருந்தில் இடநெருக் கடியால் மக்கள் சொல்லொணா துன்பம் அனுபவிப்பார்கள்.

முன்பு 8மணி பேருந்து 785 காலை 8.40இற்கு திருப்பி விடப்பட்டதால் மாணவர்க ளுக்கு ஓரளவு நிம்மதியாயிருந்தது. ஆனால் இப்போது 782 ஆல் திருப்பிவிடப்படுவதால் வட்டு. இந்து, வட்டு. மத்தி, சுழிபுரம் செல்லும் மாணவர்கள் தாங் கொணா கஸ்டங்களை அனுபவிக்கின்றனர்.

அது மட்டுமல்ல நண்பகல் 12 மணிக்கு வடக்கு அராலியால் பேருந்து நிலை யத்தைச் சென்றடையும் பேருந்து 785 பிற்பகல் 1.40க்கு முதல் பேருந்தாக யாழ்ப் பாண பேருந்து நிலயத்திலிருந்து, புறப்பட்டு கிட்டத்தட்ட பிற்பகல் 2மணிக்கு வடக்கு அராலி வந்தடையும். இலங்கை சோசலிச குடியரசிலோ அன்றி உலக நாடு களிலோ முதல் பேருந்து பிற்பகலில் ஓடுகிறதென்றால் அது 785 என்றுதான் பெருமையடைய வேண்டும்.

வெவ்வேறு வழிகளால் யாழ். சென்ற மாணவர்கள், வயோதிபர்கள், சிகிச்சைக்காகச் சென்ற நோயாளர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் வீடு திரும்ப வழியின்றி பேருந்து 789 இல் ஏறி அராலி பாலத்தில் இறங்கி கொதிக்கும் வெய்யிலில் நடந்து இரண்டரை மைல் தூரவுள்ள வடக்கு அராலியை அடையும் சோகக் காட்சி மனதை உருக்கச் செய்யும்.

இந்தநிலையைக் கவனிப்பார் இல்லையா?

**எஸ்.ஆர். அருமைநாயகம்**
*அராலி வடக்கு.*

# பாலித ரங்க பண்டார எம்.பியை மூன்று மணி நேரம் விசாரித்தது சி.ஐ.டி.

கொழும்பு, ஜூலை 29

ஐக்கிய தேசிய கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கபண்டார குற்றப்புலனாய்வு பொலி ஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை குற் றப்புலனாய்வு அலுவலகத்திற்கு அழைக் கப்பட்ட பாலித ரங்க பண்டார சுமார் மூன்று மணிநேரம் விசாரணைக்கு உட்ப டுத்தப்பட்டார் எனக் கட்சியின் பொது செய லாளர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்தார்.

முக்கிய உறுப்பினர் ஒருவரைக் கொலை செய்யவதற்கான சதித்திட்டம் குறித்து அறிந்துள்ளீரா? அது தொடர்பாக நாடாளு மன்றத்தில் எதேனும் பேசினீரா - என்று குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தன்னி டம் வினவினர் என பாலித ரங்க பண்டார ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மகேஸ் வரன், ரவிராஜ் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டமை குறித்து தான் நாடா ளுமன்றத்தில் பேசினார் என்றும், வேறு கொலை செய்யப்படவுள்ள நபர்களைப் பற்றி எதுவும் பேசவில்லை என்றும் குற் றப்புலனாய்வுப் பொலிஸாரிடம் தான் எடுத்து கூறினார் என பாலிதரங்க பண் டார மேலும் தெரிவித்தார்.

அத்துடன், விமான நிலைய முன்னாள் பணிப்பாளர் திரான் அலஸ் மற்றும் எமில் கண்ணன் போன்றவர்கள் குறித்தும் தன் னிடம் விசாரணை நடத்தினர் எனவும் கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் பாலித பண்டார, அவர்கள் குறித்து தனக்கு எது வும் தெரியாது எனப் பொலிஸாரிடம் தான் தெரிவித்தார் என்று சொன்னார்.

(அ-சி).

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை29

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திரு விழாவை முன்னிட்டு இந்துகலாசார அலு வல்கள் திணைக்களத்தால் நல்லூர் நாவ லர் மணி மண்டபத்தில் அபிவிருத்தி உத வியாளர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் நடத் தப்பட்டு வருகின்றன.

இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ''சமய வாழ்வு'' என்னும் தலைப் பில் கனகராசாவின் சிறப்புச்சொற்பொழிவு இடம்பெறும்.

* * *

நல்லூர் இளங்க லைஞர் மன்றத்தி னர் நல்லூர்ப் பெருந் திருவிழாவை முன் னிட்டு தெல்லிப் பழை துர்க்காதேவி ஆலயத்தின் ஆதரவு டன் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்ட பத்தில் தெய்வீக இசையரங்கு நிகழ் வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இன்று புதன்கி ழமை மாலை 6.30 மணிக்கு இசைக் கச்சேரி இடம்பெற வுள்ளது. பாட்டு- செல்வி சிவரூபி ஸ்ரீ ஜெகநாதன், வய லின்- செல்விஜனனி நல்லைநாதன், மிரு தங்கம்- செல்வன் கிருபா அனந்தகோ பன், முகர்சிங்- எஸ். செந்தூரன். (201)




# நல்லூர் பெருந்திருவிழாக் கால உதயனின் சிறப்பம்சம்

## பணிகின்றோம்; கருணை தருவாய்

நல்லையிலே கோயில் கொண்ட
வேலவ அமுதே எங்கள்
இன்னல்கள் பலவுந் தீர
வழிபல காட்டும் தேவா
மின்கொடி வள்ளி தெய்வ
நாயகி யோடும் வீதி
தன்னிலே கண்டு நாமும்
பணிவுடன் வணக்கம் செய்வோம்.

*கவிமணி கந்தமுருகேச தாசனார்.*

## உன்னருளால் கிட்டிடட்டும் நல்வாழ்வு

சொல்ல மொழியில்லை! ஐயா! உந்தன் அழகு!
சொல்லி முடிவதில்லை! ஐயா! உந்தன் கருணை!
ஆறுதிருமுகமும் அருளைப் பொழியுதையா!
ஆன்மாவின் இருளகன்று ஒளியும் வீசுதையா!
ஆங்காரம் கொண்ட சூரச குலம் அழித்தவனே!
ஓங்காரப் பொருளுரைத்திட்ட சுவாமி நாதா!
நீங்காது எங்கும் நிறை சிங்கார வேலவனே!
உனக்கின்று நல்லூரில் பெருந்திருவிழா!
உன்னருளால் கிட்டிடும் நல்வாழ்வெமக்கு!.

*செ.செல்வராணி, சண்டிலிப்பாய்.*

## வாருங்கள் நல்லூருக்கு நல்வாழ்வு பெறலாம்

| | | | |
|---|---|---|---|
| வாருங்கள் | நீங்களும் | நல்லூ | ருக்கு |
| வள்ளி | மணாளன் | உற்சவம் | காண |
| பாடுங்கள் | அவன்புகழ் | தனையே | என்றும் |
| பாரினில் | பிறந்த | பயனை | அடைய |
| நாடுங்கள் | அவனின் | துணையைத் | தானே |
| நாமிங் | குநல்ல | தீர்வு | பெறவே |
| தேடுங்கள் | அவனின் | திருப்பா | தங்கள் |
| தேடி | வணங்கினால் | நல்வாழ் | வுபெறலாம். |

*வ.யோகானந்தசிவம்.*

## மயில் மீது வலம் வந்து எமக்கருள்வாய்

தமிழ் என்ற மூன்றெழுத்தில்
முருகா என்றுனைப்பாட
அருள் என்ற மூன்றெழுத்தைத்
தருகின்ற பெருமானே
புகழ் என்ற வடிவத்தில்
அடியார்களுனைப் பாட
மயில் மீது வலம் வந்து
ஞாலத்தைக் காத்திடுவாய்
எழில் பெருகு நல்லூரில்
மனம் விரும்பி உறைபவனே!
துயில் எழுந்து வருகின்றோம்
உன் பாதம் பணிவதற்கே
மணியொலிகள் முழங்கிடவே!
பவனி வந்து அருள் தருவாய்.

*எம்.தவரூபன், வட்டு.இந்துக் கல்லூரி.*

## என் மனம் நினைந்திடும் உனை

மணிக்கோர் முறை உன்மணி ஒலித்திடும்
நொடிக்கோர் முறை என்மனம் நினைத்திடும் உனை
நால்திசைக்கோர் கோயில் உனைக் காக்கவென்று
எமக்கோர் அமைதி தந்திடுவாய் விரைவில்.

*அரியாலையூர் எம்.சூரி.*

## கைவேலுடன் காட்சி தாருமையா!

நல்லூர்ப் பதியினில் உறைவோனே!
நலங்கள் யாவும் தருவோனே!
நன்மைகள் எங்கும் நடந்திடவே!
நல்லை நாயகன் நீ அருள்வாயே!

கருணை உள்ளம் கொண்டவனே!
கவலைகள் யாவும் தீர்ப்பவனே!
கரிமுகனின் தம்பி ஆனவனே!
கஷ்டங்கள் வராமல் காத்திடய்யா!

வேலைக் கையில் தாங்கியவனே!
வேண்டிடும் அடியவர் குறைதீர்ப்பாயே!
வேதனை களைந்தெமக்கருள் தந்திடவே!
வேலுடன் காட்சி தருவாயே!.

*செல்வி கி.துர்க்காம்பிகை*
*மானிப்பாய்.*

## இன்னருள் புரிந்திட மயிலேறி வா முருகா

நல்லையிலே தில்லை காண
நல்லூரா வீதியுலா வா
நாடோறும் உனைப் பணிய
நாதனே வீதியுலா வா
தொல்லை தரு வினையகல
தோகையனே வீதியுலா வா
தும்பி முகன் தம்பீ! உனைத்
துதி பாட வீதியுலா வா
கல்லையொத்த மனமுருகக்
கந்தா நீ வீதியுலா வா
கழல் பாடிக் கவிதை தரக்
கடம்பனே வீதியுலா வா
எல்லையில் உன் கருணை
எமையாள வீதியுலா வா
ஏறுமயில் மீது வந்து
இன்னருள் புரிய வீதியுலா வா.

*தேவி கணேஸ், இராசாவின் தோட்டம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- " அன்பினால் உலகையே வெல்ல முடியும் "

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்

**By Pon. Sakthivel AIAB (Lond) ACEA (Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)**

**23.07.2009 Continuity.....**

25. I heard you quite clearly.
நான் நீங்கள் கூறியதை தெளிவாகக் கேட்டேன்.

26. They were wonderfully decent to her.
அவர்கள் அவளுக்குச் சிறப்பான மரியாதை செய்தார்கள்.

27. He nobly gave up his share.
அவன் பெருந்தன்மையுடன் தன்னுடைய பங்கை விட்டுக்கொடுத்தான்.

28. He slept soundly yesterday night.
அவன் நேற்று இரவு அமைதியாக படுத்தான்.

29. You can carry it easliy in a bag.
நீர் இதனை பையில் வைத்து இலகுவாகக் கொண்டுசெல்லலாம்.

30. He disobeyed you wilfully.
அவன் தன்னிச்சையாக உனக்குப் பணியவில்லை.

31. He completed the task honourably.
அவன் வேலையைக் கௌரவமாகச் செய்துமுடித்தான்.

32. She behaved strangely yesterday.
அவள் நேற்றுக் கடுமையாக நடந்துகொண்டாள்.

33. Calmness comes naturally to him
அமைதி அவனிடம் இயற்கையாகவே உள்ளது.

34. It was a sharply pointed knife.
அது மிகவும் கூர்மையான கத்தியாக இருந்தது.

35. I didn't understand it fully.
நான் இதை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை.

36. They actively discouraged us from doing it.
அதைச் செய்வதிலிருந்து எம்மை அவர்கள் முனைப்பாக அதைரியப்படுத்தினார்கள்.

37. He threw them out carelessly.
அவன் அவற்றைக் கவனமின்றி வீசினான்.

38. After the exercise, he has been walking stiffly.
விளையாட்டுப் பயிற்சியின் பின் அவன் உசாராக நடந்தான்.

39. They accepted the money gratefully.
அவர்கள் நன்றியுடன் பணத்தை ஏற்றுக் கொண்டனர்.

40. He seems truly worried.
அவன் உண்மையில் கவலைப்படுபவன் போல் தோன்றுகிறான்.

41. The price of petrol is rising rapidly.
பெற்றோலின் விலைவேகமாக அதிகரித்து வருகிறது.

42. You cannot act safely on what he says.
அவன் சொல்வதைக்கேட்டு நீ பாதுகாப்பாகச் செயற்படமுடியாது.

43. He listened to the complaints quietly.
அவன் முறைப்பாடுகளை மெதுவாகக் கேட்டான்.

44. You must advise him strongly against it.
நீ அவனுக்குக் கடுமையாக இதுபற்றி எதிர்த்து புத்திமதி கூறு.

45. They went directly to the temple.
அவர்கள் நேரடியாகக் கோயிலுக்குச் சென்றார்கள்.

46. He agreed to do it willingly.
அவன் தானாகவே இதைச்செய்யச் சம்மதித்தான்.

47. She tricked me into it cleverly.
அவள் என்னைப் புத்திசாலித்தனமாக இதில் ஈடுபட வைத்தாள்.

48. I do not want to trouble you needlessly.
நான் தேவையில்லாமல் உன்னிடம் பிரச்சினைபண்ண விரும்பவில்லை.

49. She was strangely calm.
அவள் அமைதியானாள்.

50. They divided the property equally between them.
அவர்கள் சொத்தைத் தமக்குள் சமமாகப் பிரித்து எடுத்தனர்.

51. He practically pushed them out of there.
அவன்உண்மையில் அவர்களை அங்கிருந்து வெளியே தள்ளினான்.

52. The work wasn't progressing satisfactorily.
அந்த வேலை திருப்திகரமாக முன்னேறிச் செல்லவில்லை.

53. He was lying wilfully to them.
அவன் வேண்டுமென்றே அவர்களுக்குப் பொய் சொன்னான்.

54. He divided the money fairly among them.
அவன் பணத்தை அவர்களிடையே நியாயமாகப் பகிர்ந்தான்.

55. We met accidentally.
நாங்கள் தற்செயலாகச் சந்தித்தோம்.

56. He smiles stiffly.
அவன் கம்பீரமாகச் சிரிக்கிறான்.

57. She thanked him politely.
அவள் பண்பாக அவனுக்கு நன்றிசொன்னாள்.

58. They strongly influence him in all that he does.
அவன் செய்வதெல்லாவற்றிலும் அவர்கள் பலமாகத் தமது செல்வாக்கைச் செலுத்துகிறார்கள்.

59. She gladly took up the work.
அவள் மகிழ்ச்சியுடன் வேலையைப் பொறுப்பேற்றாள்.

60. We don't konw what he truly feels.
அவன் உண்மையில் என்ன நினைக்கிறான் என்று எமக்குத் தெரியாது.

61. She has kept it safely somewhere.
அவள் எங்கோ பாதுகாப்பான இடத்தில் அதை வைத்தாள்.

62. I could manage nicely without her help.
அவளுடைய உதவியின்றியே நான் நன்றாகக் காரியம் பார்ப்பேன்.

63. All this made me feel differently.
இவை யாவும் என்னை வித்தியாசமாக உணரவைத்துவிட்டன.

64. He wrote to us continually about it.
அவன் அதைப்பற்றித் தொடர்ச்சியாக எங்களுக்கு எழுதினான்.

65. He looked at me steadily for sometime.
அவன் சிறிதுநேரம் என்னை நேர்கொண்டு பார்த்தான்.

66. He can live quite independently of the others.
மற்றவர்களில் தங்கியிராமல் அவன் தனியாக வாழக்கூடியவன்.

67. He believed wrongly that there was a written order.
எழுத்துமூல உத்தரவு இருப்பதாக அவன் தவறாக நம்பினான்.

68. You have to deal with the problem seriously.
நீர் இப்பிரச்சினையில் பாரதூரமாகத் தலையிடவேண்டும்.

69. He was quietly controlling his anger.
அவன் தன்னுடைய கோபத்தை அமைதியாக அடக்கினான்.

70. We are tightly bound to one another.
நாங்கள் ஒருவருடன் ஒருவர் இறுக்கமான பிணைப்பு உடையவர்கள்.

71. I tapped on the door very gently.
நான் கதவில் மிக மெதுவாகத் தட்டினேன்.

72. You come out of the whole business rather badly.
நீர் வியாபாரத்தில் எல்லா நிலைகளிலும் மிக மோசமாகக் கடந்து வந்துள்ளீர்

73. She was clearly worried about it.
அவள் அதுபற்றி உண்மையில் கவலைப்படுகிறாள்.

74. She talked to us cheerfully.
அவள் எங்களுடன் உற்சாகமாகக் கதைத்தாள்.

75. She made some kind of a gesture awkwardly.
அவள் சிலவகையான அருவருப்பான சாடைகள் காட்டினாள்.

76. He slowly began to realise his mistake.
அவன் மெதுவாக அவனுடைய பிழைகளை உணரத்தொடங்கினான்.

77. He spends money freely.
அவன் பணத்தை தடையின்றி செலவழிக்கிறான்.

78. I am sincerely thrilled.
நான் உண்மையில் உணர்ச்சிவசப்பட்டுள்ளேன்.

79. He was acting selfishly.
அவன் தன்னலம் கொண்டவனாக நடந்து கொண்டான்.

80. He makes decisions swiftly.
அவன் விரைவாக முடிவுகளை எடுக்கிறான்.

81. Describe everything fully.
எல்லாவற்றையும் முழுமையாக விபரி.

82. Things have not gone too badly.
எல்லாம் மிக மோசமாகிவிடவில்லை.

83. He had correctly predicted my future.
அவன் என்னுடைய எதிர்காலம்பற்றிச் சரியாகச் சொன்னான்.

84. I"ll bring it to you personally.
நான் இதனை உமக்கு நேரில் கொண்டுவருவேன்.

85. She explained it very simply.
அவள் மிக இலகுவாக இதை விளக்கினாள்.

86. You were indiretly encouraging them.
நீங்கள் மறைமுகமாக அவர்களுக்கு ஊக்கம் கொடுத்தீர்கள்.

87. His troubles increased steadily.
அவனுடைய பிரச்சினைகள் தொடர்ச்சியாக அதிகரித்தன.

இவற்றின் தொடர்ச்சி எதிர்வரும் புதன் கிழமை
இலகுவழி ஆங்கிலம் - 28 இல் வெளிவரும்......

மேலதிக தொடர்புகளுக்கு :-
உதயன் கல்விச்சுடர்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 071-4273035, 021-2223837

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைத் தல அழுத்தங்கள் பெண்களின் தலைமுடி உதிர்வுக்குப் பெரிதும் காரணமாகின்றன!




பெண்களின் முடி உதிர்வது பொதுவான ஒரு பிரச்சினையாகச் சமகாலத்தில் தோன்றியுள்ளது. வேலைத்தள அழுத்தங்களைச் சமாளிக்க முயற்சி செய்யும் வேளையும், வேலைப்பளுவையும் தனிப்பட்ட வாழ்க்கைச் சுமையையும் சமப்படுத்த எத்தனிக்கும் போதும், உணவில் கவனம் செலுத்தாது ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு, நோய் வாய்ப்படுவதற்கும், முடிவில் முடி உதிர்தல் மற்றும் நலிவடைதல் முதலிய பிரச்சினைகளையும் தோற்றுவிக்கிறது. அழுத்தத்துடன் தொழில் புரியும் பெண்களிடையே முடி உதிர்தல் பொதுவாகக் காணப்படுகிறது. 'நாள் முழுவதும் கணனியின் முன் உட்கார்ந்திருந்து குறிப்பிட்ட காலத்துள் அறிக்கை சமர்ப்பித்துவிட வேண்டுமென எத்தனிப்பது அவர்களுக்குப் பெரும் அழுத்தத்தைக் கொடுக்கிறது.

இது நீடிக்கும்போது முடி உதிர்தல் ஆரம்பிக்கிறது. நகர்ப்புறங்களில் வளிமாசடையும் காரணத்தாலும் பெண்களுக்குத் தலைமுடி உதிர்வடைகிறது என்கிறார் முடிநடுதல் தொழில்நுட்ப நிபுணர் டாக்டர் பிஷான். இரும்புச் சத்துக் குறைபாடு, தைரோயிட் பிரச்சினை போன்ற பல்வேறு காரணங்களாலும் பெண்களுக்குத் தலைமுடி உதிர்கிறது. பிரச்சினைக்குரிய மூலகாரணம் கண்டறியப்பட்டாலே சிறந்த சிகிச்சை வினைத்திறனாகச் செயற்படுத்த முடியும் என்கிறார் டாக்டர் பிஷான். இருப்பினும் இது ஒரு பாரம்பரிய பிரச்சினையாக இருந்தால் சிகிச்சை முறை பெரும்பாலும் பயனளிக்காது.தற்போது 'முடி நடுதல்' தொழில்நுட்பச்சிகிச்சை முறை பிரபலமாகியிருக்கிறது. முடி உதிர்ந்த பல பெண்கள் இவ்வகை சிகிச்சையைப் பெரிதும் விரும்பி வைத்தியசாலைகளை நாடிவருகிறார்கள். ★★★



# மனமே சாய்ந்துவிடாதே!

நமது பிரதேசங்களில் பலர் நெருக்கீட்டுக்கு உள்ளாகிறார்கள். அவர்களுக்கு எவ்வாறு உளவளத்துணையாளரும் குடும்பத்தினரும் உதவலாம் என்பதைப் பற்றி அறிந்திருத்தல் பல சந்தர்ப்பங்களில் உதவும்:-

ஒருவரின் நெருக்கீட்டைக் குறைப்பதற்கும் மாற்றுவதற்கும் உதவும் இந்த ஆலோசனைகளை அல்லது வழிமுறைகளை "உளவியல் முதலுதவி" எனச் சொல்லலாம்.

★ நித்திரைக் குழப்பங்களைக் குறைத்து நல்ல நித்திரை செய்தலை வழமையாக்குதல்.

★ பகல்பொழுதில் தனியே இருந்து யோசித்துக் கொண்டிராமல் பயனுள்ள வேலைகளில் ஈடுபடுதல், மகிழ்ச்சியாக இருத்தல்.

★ மாலை நேரங்களில் கடற்கரையாயின் சூரிய அஸ்தமனத்தை ரசிப்பது மனதிற்கு ஆறுதல் அளிக்கும். காலையில் சூரிய உதயம்; பூக்கள் மலர்வதைப் பார்த்தல். பூவின் இதழ்கள் மொட்டில் இறுக்கமாக இருந்து விரியும்போது இசை எழத்தானே செய்யும்! அந்த ஓசையைக் கேட்க,"பூப்பூக்கும் ஓசை அதைக் கேட்கத்தான் ஆசை...." என்று ஒரு கவிஞன் ஆசைப்பட்டானே!

★ இரவிலும் வேண்டுமெனில் பகலிலும் - கடும் வெயில் பொழுதுகளில் ஓய்வெடுத்தல் மிக ஆரோக்கியமானது. இரவிலும் பகலிலும் வேண்டாத சத்தங்களைக் குறைத்துக் கொள்ளல். [உ-ம்:- யாழ்ப்பாணத்தில் எங்கும் ஒலிபெருக்கிகள்] குடும்பத்தில் அமைதியைப் பேணுதல்.

★ நெருக்கீட்டைச் சாதகமான முறையில் எதிர்கொள்ள அனைவரும் கற்றிருக்க வேண்டும்; தெரிந்திருக்கவேண்டும். இதற்கு உதாரணமாக, நமக்குவரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்பதைக் குறிப்பிடலாம். நமது அறிவு, ஆற்றல், அனுபவம், தன்னம்பிக்கை போன்றவற்றின் உதவியோடு நமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டுவிட வேண்டும்.

பிரச்சினைகள் வாழ்வில் வரும் படிக்கற்கள். அந்தப் படிக்கற்கள் மீது படிப்படியாக ஏறி வாழ்வில் உயர்ந்து உச்சிக்கே சென்றுவிடவேண்டும்."Let the provlems come, I will Solve them" என்று ஓர் அறிஞர் சொன்னார்.

★ பிரச்சினைகளைத் தவிர்த்துச் செல்லுதல் பாதகமான விளைவுகளையே உண்டாக்கும். இவற்றின் தீர்வுக்காக மற்றவர்களில் தங்கியிருப்பதும் சாதகமான வழிமுறையல்ல. இவை நெருக்கீட்டை மேலும் அதிகரிக்கும்.

★ சாந்த வழிமுறைகளைப் பின்பற்றுதல் நெருக்கீட்டைக் குறைக்கும்.

மனச்சாந்தியைத் தரக்கூடிய சிலவற்றை இங்கே குறிப்பிடலாம். நல்ல நூல்களை வாசித்தல், பாட முடிந்தவர்கள் பாடுதல், கர்நாடக இசையை அல்லது விருப்பமான இசையைக் கேட்டல், விளையாட்டுகளில் ஈடுபடல், அமைதியான நிகழ்ச்சிகளை மட்டும் தொலைக்காட்சியில் பார்த்தல், உலாவுதல், நண்பர்களுடன் முரண்படாமல் உரையாடுதல், ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் [காலையில்] தியானம் செய்தல், நல்ல ஓய்வு எடுத்தல்.

★ ஒருவர் தனது ஓய்வு நேரத்தில் என்ன செய்கிறார் என்பதை உளவளத் துணையாளர் கேட்டறிதல் வேண்டும். அது அவரின் நெருக்கீட்டு நிலைக்குப் பொருத்தமானதாயிருக்கிறதா எனப் பார்த்து அவரை மேம்படுத்தக்கூடிய பொருத்தமான முறைகளைச் சிபார்சு செய்தல் வேண்டும். தளர்வான ஓய்வு நிலைக்கு வருவதில் கஷ்டப்படுபவர்களுக்குத் தகுந்த சாந்த வழிமுறைகளை - யோகாசனப் பயிற்சிகளைத் தகுந்த ஒருவர்மூலம் பயிற்சி அளிப்பித்தல் வேண்டும். ஒருவர் சாதாரணமாகச் சுவாசிக்கும்போது பிராணவாயுவை ஓரளவே எடுக்கிறார். அதிகளவு பிராணவாயுவை உள்ளெடுக்க ஆழமான சுவாசப் பயிற்சியும் பிராணாயாமமும் சிறந்த முறைகளாகும்.

இந்துக்கள் காலையும் மாலையும் செய்யும் சந்தியாவந்தனத்தில் பிராணாயாமம் ஒருமுக்கிய பங்கை வகிக்கிறது.


இர... சந்திரசேகரசர்மா M.A.

12



## கூண்டுப் பறவைகள்

எத்தனை
காலம்தான்
இந்தக் கூட்டுக்குள்
இறைக்காக
இறந்து நிற்பது
எங்களின்
இறக்கைகளைத்தாருங்கள்
வளம் நிறையும்
எங்கள் தேசத்தில்
நமக்காக
நாமே
வாழ்கின்றோம்.






# நலம் தரும் மூலிகை உணவுகள்

உணவே மருந்து 1

இன்றைய விஞ்ஞான யுகத்தில் மருந்தையே உணவுபோல உண்டு வாழ்பவர்கள் எம்மத்தியில் அதிகரித்து வருகின்றனர். குறிப்பாக, எம்மத்தியிலுள்ள வயோதிபர்களில் பலர் கட்டுக்கட்டாகக் கிளினிக் கொப்பிகளையும் டப்பா டப்பாவாக மருந்து மாத்திரைகளையும் வைத்துக் கொண்டு உணவை மருந்தாகவும், மருந்தை உணவாகவும் பாவிக்கும் விசித்திரத்தைக் காண்கிறோம். இந்நிலை மாற்றியமைக்கப்படவேண்டிய ஒன்றாகும். மிக மிக அவசியம் என்றாலொழிய மருந்து, மாத்திரைகளைப் பாவிக்கும் நிலை தவிர்க்கப்படல் வேண்டும். பெரும்பாலான மருந்துகள் நோயைக் குணப்படுத்துவதுபோலத் தோன்றினாலும், பல பக்கவிளைவுகளைத் தோற்றுவித்துப் புதிய வியாதிகளுக்கு வழிகோலுகின்றன. அதனாலேயே எமது சித்தர்கள் பலநூற்றாண்டுகளுக்கு முன்னரே தெய்வ அருளுடனும், ஆராய்ச்சி செய்தும், அனுபவத்தில் கண்டறிந்தும் மூலிகை உணவு மருத்துவ முறையை எமக்கு வழங்கியுள்ளனர். அது உணவே மருந்து என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவானது. உணவே மருந்து என்ற சித்தர்களின் கோட்பாட்டுக்கும் மருந்தையே உணவாகக் கொண்டு வாழமுற்படும் இக்காலத்தவர்களது செயற்பாடுகளுக்கும் முரண்பாடுகள் உள்ளன.

உணவே மருந்து என்று கூறும் போது உணவை மருந்துபோல அதாவது உடல் ஆரோக்கியமாக வாழ்வதற்குத் தேவையான குறைந்த பட்ச அளவில் உட்கொண்டு வாழ்வதாகும். இதனையே திருவள்ளுவர்.

"அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு"

என்று கூறியுள்ளார்.

உணவே மருந்து என்பதற்கு இன்னொரு கருத்துமுண்டு. அது உணவையே மருந்தாகப் பயன்படுத்துதலாகும். அதாவது நோய்கள் வராமல் இருப்பதற்கும், வந்த நோய்களை நீக்குவதற்கும் தகுந்த மூலிகைகளைத் தெரிவு செய்து உணவாகச் சமைத்து உண்பதன் மூலம் நோயின்றி ஆரோக்கியமாக வாழமுடியும் என்பதாகும். இந்தத் தொடரில் மூலிகை உணவுகள் பற்றிப் பல்வேறு தலைப்புகளில் எழுதப்படவுள்ளது.

இவையாவும் எமது முன்னோர்களால் காலங்காலமாகப் பயன்படுத்தப்பட்டவையாகும். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்' என்றொரு பழமொழியும் உள்ளது. மூலிகையுணவுகளென்றாலும் அவற்றை வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு நாள்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதற்கு மேல் பயன்படுத்துவதனாலும், தயாரிப்பதில் ஏதும் சந்தேகங்கள் ஏற்பட்டாலும் தகுந்த வைத்திய ஆலோசனை பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

மூலிகை உணவுகளில் முதலாவதாகக் கஞ்சி வகைகளைப் பற்றிப் பார்ப்போம்.

கஞ்சி என்றவுடன் அது ஏழைகளின் உணவு என்றும், நோயாளிகளுக்குரிய பத்திய உணவு என்றுமே பலரும் நினைக்கின்றனர். ஆனால், கஞ்சிகள் சுகதேகிகளுக்கும் போஷாக்குணவாக விளங்குகின்றன. கஞ்சிகள் திரவநிலையிலும், இலகு குணமுள்ளவையாகவும் இருக்கின்றன. எனவே ஒருவரின் பசி, தாகத்தைத்தணிக்கக் கூடியனவாகவும் நீரிழப்பு, அஜீரணம் என்பவற்றை நீக்கக் கூடியனவாகவும் உள்ளன.

எனவே கஞ்சி வகைகளும் அவற்றைத் தயாரிக்கும் முறைகளையும் 'புதன் பொய்கை' யில் தொடர்ந்து படியுங்கள்.

### 1. இலைக்கஞ்சி

**இலைக்கஞ்சி தயாரிக்கத் தேவையான பொருள்கள்**

அரிசி - 100 கிராம் (1/2 சுண்டு), பயறு/ பருப்பு - 25கிராம் ( 1 மேசைக் கரண்டி), கீரை/ இலை வகை - 1பிடி, தேங்காய் பாதி, நற்சீரகம்-1/2 தேக் கரண்டி, மிளகு- 4,5., உப்பு - தேவையான அளவு

**தயாரிக்கும் முறை**

பச்சையரிசி அல்லது புழுங்கல் அரிசியைப் பயன்படுத்தலாம். நீரிழிவு நோயாளிகளானால் வரகரிசியைப் பயன்படுத்தலாம். [வரகரிசியிலும் பச்சையரிசி, புழுங்கலரிசி என்றுண்டு] எந்த அரிசியாக இருந்தாலும் அது குருணலாக இருந்தால் நல்லது. முழு அரிசியாக இருந்தால் மிக்சியில் இட்டு குருணலாக எடுத்துக் கொள்ளலாம். முதலில் அரிசியை நன்கு சுத்தம் செய்து கழுவி, கல்லரித்து எடுத்து ஒரு பானையில் நீர் விட்டுக் கொதிக்க வைத்து, நீர் கொதிக்கத் தொடங்கியதும் அரிசியைப் போட்டு நன்கு வேகவிடவும். பயறு அல்லது பயற்றம் பருப்புச் சேர்ப்பதாயின் அதனையும் சுத்தம் செய்து அரிசியுடன் போட்டு நன்கு வேக விடவும்.

பயறு சேர்ப்பதாயின் அதனை முளைகட்டி வைத்துச் சேர்ப்பது நல்லது. முளைகட்டிய பயற்றில் உ... அதிகமாக இருப்பதுடன் இலகுவில் சமிபாடடையக் கூடியதாகவும் இருக்கும்.

பயறை முதல்நாள் காலையில் நீரில் ஊறவிட்டு மாலையில் வடித்து, ஒரு ஈரத்துணியில் முடிந்துவைத்தால் மறுநாள் காலையில் முளைகட்டியிருக்கும். முளைகட்டிய பயற்றை, அரிசி ஓரளவு வெந்த பின்னர் சேர்ப்பதே நல்லது.

கீரையைச் சுத்தம் செய்து மிக்சி அல்லது உரலிலிட்டுத் துவைத்து சிறிது நீர் விட்டுச் சாறு பிழிந்து வடித்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

கீரை வகையில் தோட்டக்கீரை, அரைக்கீரை, வல்லாரை, கறிமுருங்கையிலை, தவசி முருங்கை யிலை, பொன்னாங்காணி, பசளி, அகத்தியிலை, முசுட்டையிலை போன்றவை பொதுவாகப் பயன்படுத்தக் கூடியனவாகும். ஒன்று அல்லது இரண்டு இலை வகைகளை மட்டும் ஒரு இலைக்கஞ்சியில் சேர்த்தால் போதுமானது.

குழந்தைகள், வயோதிபர்களுக்காக இலைக்கஞ்சி தயாரிக்கும் போது இலை வகைகளைச் சாறாக எடுத்துச் சேர்ப்பதே நல்லது. மற்றவர்களுக்கான இலைக்கஞ்சியில் இலைவகையைக் குருணலாக அரிந்து சேர்த்துக் கொள்ளலாம். அவ்விதம் இலையாகச் சேர்ப்பதாயின் அதனையும் முளைகட்டிய பயறு சேர்க்கும் போது சேர்த்து வேகவிடவேண்டும். சாறாகச் சேர்ப்பதாயின் அரிசி, பருப்பு என்பன நன்கு வெந்து வரும்போது சேர்ப்பதே நல்லது.

தேங்காய்ப் பாதியைத் துருவிப் பிழிந்து பாலெடுத்து வைத்துக் கொள்ளவும். அரிசி, பருப்பு என்பன நன்கு வெந்து கீரைச்சாறும் விட்டு, இரண்டு கொதிகொதித்த பின்னர் தேங்காயைப்பாலை விட்டுக் கொதிக்க விடவும்.

நற்சீரகம்,மிளகு [ தேவைப்பட்டால் வெந்தயமும் சேர்க்கலாம் ] என்பவற்றை இடித்து பொடியாக எடுத்து அதனையும் தேவையான உப்பையும் சேர்த்துப் போட்டு நன்கு கொதித்ததும் இறக்கிக் கொள்ளவும். இலைக்கஞ்சி ஒரு பானம்; அதாவது திரவ உணவாகும். எனினும் சுகதேகிகள், கர்ப்பிணிகளுக்கான இலைக் கஞ்சி சற்று இறுகிய பதத்தில் இருந் தாலும் பாதகமில்லை. இலைக்கஞ்சியைப் பணங்கட்டி அல்லது வெல்லம் சேர்த்து இளஞ்சூடான நிலையில் பருகலாம். [கஞ்சி வகை இளஞ் சூடான நிலையில் பருகுவதே நல்லது] அல்லது அவற்றைச் சேர்க்காமலும் பருகலாம்.



டாக்டர் சே. சிவசண்முகராஜா [M.D(S)]
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நெஞ்சம் நிறைந்த நீங்காத நினைவுகள்



புலவர்மணி, நாற்கவிராஜன், கலைவாரிதி
கலாபூஷணம், செந்தமிழ்ச் செல்வர்
பண்டிதர்

### கதிரேசு மயில்வாகனனார்

வள்ளியம்மை மடியில்: 25.01.1916
விசுவேசர் பாதங்களில்: 09.08.2008

திதி: அட்டமி (29.07.2009)

காலம்பல எம்முடனே இருந்து நீங்கள்
கண்மணியாய் எமையெல்லாம் காத்து நின்றீர்
ஞாலமதில் எம்முயர்வு தனையே எண்ணி
நாளெல்லாம் உனைவருத்தி உயரச் செய்தீர்
பாலகனாய் எமையெல்லாம் கருதி நீங்கள்
பாலூட்டும் தாய்போல அணைத்துக் கொண்டீர்
சாலவுமே சிறந்தவுன்தன் அன்புக் கீடாய்ச்
சாற்றிடவே இப்புவியில் யார்தான் உளரோ
பட்டங்கள் பாராட்டுகள் பலவும் பெற்றீர்
பாரினிலே தமிழாய்ந்து அறிஞ ரானீர்
சிட்டாகப் பறந்துபல பிரசங் கங்கள்
தேனூறும் தமிழாலே செய்து நின்றீர்
கிட்டாத பெரும்புகழே பெற்றுக் கொண்டீர்
கிடைத்தற்கு அரிதான வரிசைகள் பெற்றீர்
மட்டிலாப்பெரும் புகழ்தனையே தேடிக் கொண்டீர்
வானுறையும் விசுவேசர் பாதம் சேர்ந்தீர்

தங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

வட்டு -வடக்கு,
வட்டுக்கோட்டை.

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (201)

### கூட்டம்

இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2008ஆம் ஆண்டு வரை பாடசாலையில் கல்விகற்ற அனைவரையும் இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (201)

### டெங்கு ஒழிப்பு சிரமதானம்

பாடசாலைகளில் ஒவ்வொரு வாரமும் முதல் நாளில் (திங்கட்கிழமைகளில்) அரை மணித்தியாலம் சிரமதானப் பணிகளில் ஈடுபடுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். இதன்படி பாடசாலைச் சூழலைச் சுத்தம் செய்யுமாறும் அதனூடாக டெங்கு நோயினைத் தவிர்க்க முடியுமெனவும் தீவக வலயப் பாடசாலைகளுக்கு வலயப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். (04-267)



உங்களின் தோல் சுருக்கமடைகிறதா?
இதோ பாவியுங்கள்...
சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்
காய்ந்து இறந்த தோலை நன்கு நீக்கி தூய்மையாக்கும் தோலுக்கு மருத்துவ போசாக்கை அளித்து சருமத்தை நோயற்றதாக்கி பொன்னிறமேற்றி அழகிய இளமைத்தோற்றத்தைப் பெற்றுத்தரும்.
சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்
Chandanalepa Scrub Cream
100% herbal
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.


## 15 ஆம் ஆண்டு நினைவலைகள்

அவனியப் பிறப்பு
12 ☆ 03 ☆ 1932



அவசர அழைப்பு
14 ☆ 08 ☆ 1994

அச்சுவேலியூர்
அமரர் ஆறுமுகம் லோகேஸ்வரன்
(இளைப்பாறிய ஆசிரியர் - அச்சுவேலி மத்தியகல்லூரி)
திதி: பூர்வபக்க அட்டமி

அன்போடும் அறிவோடும் எமை வளர்த்த எம் திருவே
அந்தரத்தில் எமைத் தவிக்கவிட்டு எங்குதான் சென்றீரோ
அன்றில் பறவை போன்ற அன்பான குடும்பத்திலே
அநியாய இழப்பதனால் அழுது கண்ணீர் வடிக்கின்றோம்

வாடும்நெஞ்சங்கள்:
மனைவி, மகள், மகன்,
மருமகன், மருமகள்,
பேரக்குழந்தைகள்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(87379)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
இராஜேஸ்வரி
செல்லத்துரை

மண்மகிழ: 26.04.1935 கண்நெகிழ: 09.08.2008
திதி: அட்டமி

எங்கள் இல்லத்தின் சுடரொளியே
இதயத்தில் ஒளியீந்த அகல்விளக்கே
நாயகனின் பணிவிடைகள் நயமுறவே
ஆற்றிநின்ற நாயகியே நல் உணர்வே
பிள்ளைகள், பேரர் என வம்சவழி பலகண்டு
வாழ்ந்திருந்த தேவதையே திருவே அம்மா
முன்னவளாய் வந்துதித்து சோதரரை வழி
நடத்திநின்ற கலங்கரையே கண்மணியே
பண்பின் உறைவிடமே பாசத்தின் இருப்பிடமே
உமைப்பிரிந்து ஓராண்டு கரைந்தின்று கடந்ததுவோ
ஓராண்டென்ன ஓர் ஜென்மம் ஆனாலும்
அழியாது உம் நினைவு - தினம்
காத்திருப்போம் உம் வரவை......!

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆவது சிங்க றெஜிமென்டின் ஏற்பாட்டில் வடமராட்சியில் மாபெரும் கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை29

இலங்கை இராணுவத்தின் 52ஆவது கட்டளைப் பணியகத்தின் ஆலோசனையின்கீழ் 524 பிரிகேட்டின் அனுசரணையுடன் 3ஆவது சிங்க றெஜிமென்டின் ஏற்பாட்டில் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் 22ஆம், 23ஆம், 29ஆம், 30ஆம் திகதிகளில் இந்தச் சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது.

6 பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட போட்டியாக இது அமையவுள்ளது.

கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளின் அணிகளும், வடமராட்சி தெற்கு, மேற்கு பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களின் அணிகளும் இந்துப் போட்டிகளில் பங்குபற்றமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் 15ஆம் திகதி வரை கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 15ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (50)

# 17 வயதுப் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி

வலி.வடக்கு,ஜூலை29

இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 17 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான பாடசாலை மட்டத்திலான கூடைப்பந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளவுள்ள 17 வயதுப் பிரிவுப் பெண்கள் அணிகளைக் கொண்ட பாடசாலைகளை உடுவில் மகளிர் கல்லூரி அதிபருடன் அல்லது விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் ப.தர்மகுமாரன் ஆகியோருடன் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் கலந்துகொள்ளும் அனைத்துப் பாடசாலை அணிகளுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-86)

# யாழ்.சென்றல் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை29

யாழ்.மாவட்டத் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் 2008ஆம் ஆண்டிற்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் கால் இறுதிப் போட்டியில் யாழ்.சென்றல் அணி, பற்றீசியன்ஸ் அணியை 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று அரைஇறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கால் இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 30.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது.

முகுந்தன் 12 ஓட்டங்களையும், விதுபாலா 12 ஓட்டங்களையும், நிலோஸன் 11 ஓட்டங்களையும், சேர்ச்சில் 23 ஓட்டங்களையும், மிலாண்டோ 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்.சென்றல் அணியைச் சேர்ந்த சத்யன் 7 பந்து பரிமாற்றங்களில் 16 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும், விமலகாந் 6.3 பந்து பரிமாற்றங்களில் 27 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும், ஜெசிந்தன் 7 பந்து பரிமாற்றங்களில் 15 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

132 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்.சென்றல் அணி 37.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. சவிஸ்ரன் 4 சிக்ஸர், 4 பவுண்டறிகள் உட்பட ஆட்டமிழக்காது 69 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வழிவகுத்தார். அத்தோடு றஜீஸ் 20 ஓட்டங்களையும், சுதர்ஸன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பற்றீசியன் அணிவீரர் முகுந்தன் 7 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். இப்போட்டியில் வெற்றிபெற்ற யாழ்.சென்றல் அ்ணி எதிர்வரும் 02.08.2009 ஞாயிற்றுக் கிழமை நடைபெற இருக்கும் அரை இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணியுடன் மோதவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# 15 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட்
# துல்லியமான பந்துவீச்சால் வென்றது கொக்குவில் இந்து!

வலி.வடக்கு,ஜூலை29

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திவரும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி 8 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றுள்ளது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரியும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் 28.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 54 ஓட்டங்கள் மட்டும் பெற்றுக்கொண்டது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் சார்பாக அதிகபட்சமாக தவரூபன் 7 ஓட்டங்கள் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 31 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செந்தூரன் 5 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 04 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் தனுசன் 8 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், சிலோஜன் 2.3 ஓவர்கள் பந்துவீசி 5 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், பார்த்தீபன் 12 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி 11 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

•ஜெயந்தன், சிலோஜன் ஆட்டமிழக்காது முறையே 14, 22 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த அங்கீசன் 6 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (4-86)

# வலி.கிழக்குப் பிரதேச சபையால் நடத்தப்பட்ட மாட்டுவண்டி சவாரிப் போட்டிகளின் முடிவுகள்

கோப்பாய்,ஜூலை29

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்குப் பிரதேச சபையினால் நடத்தப்பட்ட மாட்டுவண்டில் சவாரிப்போட்டி அண்மையில் நீர்வேலி சவாரித்திடலில் இடம்பெற்றது.

இப்போட்டியில் 35 சோடிக்கும் மேற்பட்ட சவாரி மாடுகள் கலந்துகொண்டன.

சவாரி மாடுகள் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு போட்டிகள் இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றியீட்டிய சவாரி மாடுகளின் உரிமையாளர்கள் பெயர் விவரம் வருமாறு:

*'ஏ' பிரிவு:-* க.தவராசா (பண்டத்தரிப்பு), சிவகுமார் பவில்தாசன் (பாலாவி தெற்கு, கொடிகாமம்), கணபதிப்பிள்ளை சிவஞானம் (டச்சு றோட், அளவெட்டி).

*'பி' பிரிவு:-* யோகநாதன் செந்தில்குமரன் (சங்கரத்தை), நகுலேஸ்வரன் மனோஜா (புத்தூர் வடக்கு, புத்தூர்), ஆயக்கடவை பிள்ளையார் (புன்னாலைக்கட்டுவன்)

*'சி' பிரிவு:-* கணபதி முருகன் (மாதகல்), கிருஷ்ணகுமார் கமல்ராஜ் (அராலி மேற்கு, வட்டுக்கோட்டை), பாலச்சந்திரன் ஐங்கரன் (அளவெட்டி).

*'டி' பிரிவு:-* கிரிதரன் இலக்கியன் (கல்வியங்காடு), சிந்துக்குமரன் சதுஜன் (அராலி மேற்கு, கொட்டைக்காடு), நவரத்தினம் ரவீந்திரன் (புத்தூர் கிழக்கு). (4-72)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட பெண்களுக்கான தடகளப் போட்டிகளின் முடிவுகள்

வலி.வடக்கு,ஜூலை29

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர்கள் சேவைமன்றம் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான தடகளப் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றன .

இப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விவரங்கள்:

*100 மீற்றர் ஓட்டம்* - எம். வினோஜா (சாவகச்சேரி), ரி.தயாளரதி (சாவகச்சேரி), பி.யசிந்தா (கோப்பாய்).

*200 மீற்றர் ஓட்டம்* - பி.துளர்சிகா (கோப்பாய்).

*400 மீற்றர் ஓட்டம்* - எம்.மதுரா (பருத்தித்துறை ), பி.தனலட்சுமி (சாவகச்சேரி), பி.யசிந்தா (கோப்பாய்).

*800 மீற்றர் ஓட்டம்* - பி.தனலட்சுமி (சாவகச்சேரி), எம்.மதுரா (பருத்தித்துறை).

*1500 மீற்றர் ஓட்டம்* - பி. தனலட்சுமி சாவகச்சேரி), கே. கல்யாணி (உடுவில்).

*5000 மீற்றர் ஓட்டம்* - கே.கல்யாணி (உடுவில்).

*வேகநடை* - பி.துளர்சிகா (கோப்பாய்), எம்.மதுரா (பருத்தித்துறை), ஜே. நந்துஜா (தெல்லிப்பழை).

*நீளம் பாய்தல்* - பூ.பூபதி (கரவெட்டி), பி.துளர்சிகா (கோப்பாய்).

*தட்டெறிதல்* - எஸ்.கவிதா (கரவெட்டி), கே.மேகலா (கரவெட்டி),ரி .தயாளரதி (சாவகச்சேரி).

*குண்டெறிதல்* - எம்.வினோஜா (சாவகச்சேரி), கே.மேகலா (கரவெட்டி), பி. யசிந்தா (கோப்பாய்).

*ஈட்டிஎறிதல்* - எம்.வினோஜா (சாவகச்சேரி)

*4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்*- கோப்பாய் பிரதேச செயலகம், சாவகச்சேரி பிரதேச செயலகம், தெல்லிப்பழை பிரதேச செயலகம். (4-86)

# வட மாகாணத்திலே அதிக பதக்கங்களை வென்று அருணோதயாக் கல்லூரி சாதனை!

மன்னாரில் நடைபெற்ற வடமாகாண மெய்வல்லுநர் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி 19 தங்கப் பதக்கங்களையும் 6 வெள்ளிப்பதக்கங்களையும் பெற்று வடமாகாண விளையாட்டுப் போட்டியில் சாதனை படைத்துள்ளது. வடமாகாணத்திலேயே கூடுதலான தங்கப் பதக்கங்களைப் பெற்ற ஒரே ஒரு பாடசாலை அருணோதயாக் கல்லூரி என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பெரு விளையாட்டுக்களிலும் பெண்களுக்கான எல்லேப் போட்டியிலும் 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் முதலிடங்களை அருணோதயாக் கல்லூரி சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது. (4)



யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுவர்களுக்கான பரிசில்களை வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

யாழ்.மாநகராட்சி மன்ற ஆணையாளர் மு.செ.சரவணபவ, யாழ்வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், மாநகர சனசமூக நிலைய உத்தியோகத்தர் எஸ்.லோகசிவம், மாநகர சபையின் செயலாளர் எஸ்.இராசதுரை ஆகியோர் சிறுவர்களுக்கான பரிசில்களை வழங்குவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்மைத்துவத்தையும் ஜனநாயகத்தையும் கட்டியெழுப்ப யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் ஒத்துழைப்பு வழங்கும்

## அறிக்கை மூலம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

பன்மைத்துவத்தை ஏற்படுத்தி ஜனநாயகத்தை கட்டி எழுப்பி தமிழ் மக்களின் இழந்த வாழ்வை மீட்க அனைத்துத் தரப்பினரையும் ஒத்துழைக்கும்படி யாழ்.பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வேண்டி நிற்கிறோம். அரை நூற்றாண்டுக்குமேல் அனைத்துப் போராட்ட வழிமுறைகளிலும் போராடிய ஈழத்தமிழ் மக்கள் இன்று நிலை மாறும் கட்டத்திற்குள் பிரவேசித்துள்ளார்கள். தமிழ் மக்களின் கடந்த காலப் போராட்ட அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் உரியதான புதிய அரசியல் வழி முறைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தில் தமிழ் சமூகம் இன்றுள்ளது.

இதில் முதலாவதாக தகவல் யுகத்தில் எல்லா வகையான தொடர்புகளாலும் துண்டிக்கப்பட்டிருக்கும் வன்னி அகதி மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டும். அடுத்து முஸ்லிம் மக்கள் உள்ளடங்கலாக தமது சொந்த வாழ்விடங்களை விட்டு வெளியேற்றப்பட்ட சகல மக்களும் மீள் குடியேற்றப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையை முன்னிறுத்தியும் தமிழ் மக்களினுடைய கல்வி, அபிவிருத்தி, பாதுகாப்பு, மனித உரிமைகள் என்ற அனைத்து வகையான உரிமைகளையும் உள்ளடக்கிய அரசியல் அதிகாரத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை இன்றிருக்கிறது.

இழக்க முடியாதவற்றை இழந்து, சிந்த முடியாதளவு குருதியை சிந்தி உலகத்தின் இரத்த சாட்சியங்களாக இருக்கின்ற எமது வன்னி மக்களின் பாதுகாப்பு, நலன் என்பவற்றில் அக்கறை கொண்டு செயற்படுமாறு அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் கோருகிறோம்.

தமிழ்ச் சூழலில் பன்மைத்துவத்தையும் ஜனநாயகத்தையும் கட்டி எழுப்பும் தேவைக்குப் பல்கலைக்கழகத்தை தமிழ் அரசியல் கட்சிகள் பயன்படுத்தலாம். எங்கள் கதவுகளை நாங்கள் திறந்தே விட்டுள்ளோம். நடைமுறை ரீதியாகவும் யதார்த்த பூர்வமாகவும் மக்களின் தேவைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும். அவ்வாறு தீர்வு காண்போரையே மக்கள் தமது அரசியல் தெரிவாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். வன்னி அகதி மக்கள் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளுடன் தமிழ்க் கட்சிகள் மனந்திறந்து பேசவும் அடுத்த கட்டத்திற்கு செல்லவும் எங்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

எங்களிடமிருந்த வன்முறை அரசியலாலும், விட்டுக் கொடுப்பின்மையினாலும், முரண்பாடுகளாலும் எமது மக்களே அனுபவிக்க முடியாதளவு துயரங்களை அனுபவித்து இன்று முள்கம்பிச் சிறைகளுக்குள் வைக்கப்பட்டுள்ளார்கள். எமது மக்களை கவனிக்காது அவர்களைப் பார்வையிடாது மீட்பதற்கு எந்தச் சிறு நடவடிக்கையும் எடுக்காது வாக்குகளைக் கேட்க வருகின்ற தமிழ் கட்சிகள்மீது எமக்கு கடுமையான விமர்சனம் உண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வன்னி மக்களின் உடனடிப் பிரச்சினைகளில் எந்தக் கவனமும் செலுத்தாமல் நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளில் இறங்காமல் இருப்பது எமக்குக் கடும் அதிருப்தியைத் தந்துள்ளது.

ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் இன்றைய உடனடிப் பிரச்சினையாக இருப்பது வன்னி மக்கள்தான். அதுவே தாயகத்து மக்களினதும், தமிழக மக்களினதும், புலம்பெயர் மக்களினதும் நெருக்கடி நிலையாக உள்ளது. எனவே முதலில் வன்னி மக்களின் உடனடிப் பிரச்சினையைத் தீர்த்து அவர்களை தடுப்பு முகாம்களிலிருந்து விடுவித்து, மீள் குடியேற்றம் செய்ய வலியுறுத்த வேண்டிய அவசியம் உடனடித் தேவையாக உள்ளதை தமிழ் அரசியல் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது மக்களின் இன்றைய மனிதாபிமானப் பிரச்சினையை, அவலத்தை முடிவுக்குக் கொண்டுவந்த பிறகு அரசியல் தீர்வை ஏற்படுத்த வலியுறுத்துங்கள். சுயநலமான அரசியல் நோக்கங்களுக்காக வன்னி மக்களைப் பயன்படுத்துவது கண்டு சில தமிழ்க் கட்சிகள் மீது அதிருப்தி அடைகிறோம்.

வன்னி அகதி மக்களின் விமோசனத்திற்காக நடைமுறையில் இறங்குபவர்களை வன்னி மக்களே தமது பிரதிநிதியாக தெரிவு செய்வார்கள். அவர்களையே புலம்பெயர் மக்களும் தமிழகத்து மக்களும் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்வார்கள். தமிழ் மக்கள் சிந்திய குருதி வீண் போகாத வகையிலும் அவர்களுக்கு நல்ல வாழ்வுச் சூழலை கட்டி எழுப்ப நேர்மையான நடவடிக்கையில் இறங்குங்கள். தமிழ் மக்களை இனியும் தோற்கடிக்காமல் ஏகப்பிரதிநிதித்துவவாதத்தின் வன்முறை அரசியலின் அழிவில், தமிழ் மக்களுக்கு தேவைப்படுகின்ற உலகத்தின் பொதுப்போக்கான பன்மைத்துவ அரசியல் சூழலையும், மக்கள் ஜனநாயகத்தையும் கட்டி எழுப்ப மனதாரச் செயற்படுங்கள். அனைவரும் ஒன்றிணைந்து வன்னி மக்களின் நலன் சார்ந்த விடயங்களை அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் எடுத்துக் கூறுவோம்.

மக்கள் நலன் தொடர்பாக அனைத்து தமிழ்க் கட்சிகளுடனும் பேசுவதோடு நேர்மையாக, மக்கள் நலனுக்காக அர்ப்பணித்துச் செயற்படுகின்ற அரசியல் முனைப்புக்களை நாம் வரவேற்பதுடன் அதன் பின் நின்று முழுமையான எங்கள் ஒத்துழைப்பைத் தருவதற்கு தயாராக உள்ளோம் என்ற யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் நிலைப்பாட்டை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துக் கொள்ளுகின்றது.




ஸ்ரீராம ஜெயம்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

வரலட்சுமி விரதமும் நூல் கட்டலும்

31.07.2009 வெள்ளிக்கிழமை காலை
9 மணிமுதல் மாலை 5 மணிவரை.
காலை 9மணி-
விசேட அபிஷேக ஆராதனை.
தொடர்ந்து சுவாமி வீதியுலா,
கும்பதீப பூசையும் நூல் கட்டலும்.

பரிபாலனசபை.





விவேகானந்தா சபை கொழும்பு

அகில இலங்கை சைவசமய பாடப்பரீட்சை 2009

பரீட்சை 08.11.2009 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரங்கள் பாடசாலைகளுக்கு 2008 ஆம் ஆண்டுப் பரீட்சைப் பெறுபேறுகளுடன் அனுப்பப்பட்டுள்ளன. புதிதாக விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள் பரீட்சை தொடர்பான விவரங்களுக்குச்சபையின் கௌரவ பொதுச் செயலாளருடன் கடிதம் மூலம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்களை இரண்டாம் தவணை முடிவடைவதற்கு முன் அனுப்பிவைக்கவும்.

34,விவேகானந்தா மேடு,
கொழும்பு - 13.
தொலைபேசி:2422648

க.விவேகானந்தன்
கௌரவ பொதுச்செயலாளர்



31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி தவமணி தவேந்திரன்

கடந்த 29.06.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.07.2009) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாவளை இயற்றாளை,
(கல்வளை பிள்ளையார் கோயில் வீதி), வரணி.

தவேந்திரன்
குடும்பத்தினர்.


## புராண வித்தக மாமணி பட்டம் வழங்கிக் கௌரவிப்பு

வடமராட்சி கிழக்கு குடாரப்பு, செம்பியன்பற்றைச் சேர்ந்த மூத்த புராணிகரான திருவருட்சித்தர் செல்லையா செகராசசேகரத்துக்கு "புராண வித்தக மாமணி" என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

இவர் வரணி-மாசேரி குருநாதர் ஆலயத்தில் திருத்தொண்டர் புராணப் படிப்பை கடந்த 2006 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைத்து ஆலய வளர்ச்சிக்கு வழிகாட்டியாக விளங்கியுள்ளார். இந்தக் கௌரவிப்பை மேற்படி ஆலய தர்மகர்த்தா சபையினர் கடந்த 21 ஆம் திகதி ஆடி அமாவாசை விரதத் தினத்தன்று வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(50-201)

## வரவு செலவு நிதியிலிருந்து வேலைத் திட்டங்கள்

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து 30வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வீதிஅபிவிருத்தி, முன்பள்ளிகளுக்கான நிதி உதவி, சனசமூக நிலையங்களுக்கான தளபாடக் கொள்வனவு உதவி போன்றனவே வழங்கப்படுகின்றன.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஸ் பிரேமச்சந்திரன், சொலமன் சூ.சிறில் ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து [illegible] ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(203-72)


# மரண அறிவித்தல்

## திருமதி செல்லத்துரை இரத்தினவல்லி



ஆறுமுகம் வீதி, கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை இரத்தினவல்லி 28.07.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் திரவியம், ஈஸ்வரி, சுப்பிரமணியதாஸ், சிவஞானதாஸ் (லண்டன்), ஜெயதாஸ், ராஜினி ஆகியோரின் அன்புத் தாயும் பசுபதி, நேசதுரை, செல்வநாயகி, யசோரஞ்சினி (லண்டன்), சந்திரகுமாரி, வெற்றிவேல்நாதன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ரவீந்திரன் (லண்டன்), சுபாஜினி (பிரான்ஸ்), நிஷாந்தன், நிலக்ஸன், நிரோஜின், நிலேஸ்கா, மயூரதன் (லண்டன்), செந்தூரதன் (லண்டன்), சுரேன்ரதன் (சுவிஸ்), சிந்துஜன் (லண்டன்), மோனிஷா (லண்டன்), கீர்த்தனன், ஐங்கரன், மதுரிகா, லக்சிகா, பிருத்துவிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சாரங்கன் (பிரான்ஸ்), ஜெயரங்கன் (பிரான்ஸ்), சாய்ஓவியன் (லண்டன்), அபிசேக் (லண்டன்), ஜருதன் ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2009) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காகச் சங்கம்புலவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தத் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆறுமுகம் வீதி,
கன்னாகம் மேற்கு, கன்னாகம்.

(87393)

தகவல்:
குடும்பத்தினர்.



IDM
Nation's ICT Academy
Affiliated University College

IDM COMPUTER STUDIES (PVT) LTD.
AFFILIATED UNIVERSITY COLLEGE
MANIPAY BRANCH

ISO 9001:2008

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 05-08-2009

BTEC Diploma Courses - UK

- Diploma in ICT
- Diploma in Business Management
- Diploma in PC Assembling & Networking
- AutoCAD

OTHER COURSES

- ICDL
- DeskTop Publishing
- DICAP - Accounting Package
- MOS (Ms Office 2007)
- Ms Word 2007
- Ms Excel 2007
- JAVA
- Certificate in Web Design & Development
- Ms Power point 2007
- Ms Access 2007
- Ms Outlook 2007
- MCP
- Vb.Net
- ADCN

Note:
IDM Digital Solutions இல் நடைபெற்றக் கற்கை நெறிகள் அனைத்தும் 216 நாவலர் வீதியில் உள்ள IDM Computer Studies (Pvt)Ltd. இல் தொடர்ந்து நடைபெறுகின்றது என்பதனை மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

ISO தரச் சான்றிதழ் பெற்ற கணனிக் கல்லூரி

| Head Office: | Manipay Branch: | Nelliady Branch: |
| --- | --- | --- |
| 216, Navalar Road, Jaffna. | Suthumalai Road, Manipay. | Kodikamam Road, Nelliady. |
| Tp No: 021 2229901 | Tp No: 0776103231 | Tp No: 0602219639 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலுசிஸ்தான் விவகாரத்தில் இந்தியாவின் தலையீடு இல்லை

## மன்னரின் வாரிசு சுலேமான் கான் தெரிவிப்பு

டில்லி, ஜூலை 29

''பலுசிஸ்தான் விவகாரத்தில் இந்தியாவின் தலையீடு ஒருபோதும் இருக்கவில்லை. இந்தியா தலையிட்டிருந்தால் எங்களது நிலை இப்படி மோசமாக இருந்திருக்காது'' என லண்டனில் தஞ்சமடைந்துள்ள பலுசிஸ்தான் மன்னரின் வாரிசான சுலேமான் கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தீவிரவாதிகள் குறித்து இந்தியா குறிப்பிட்டால் உடனடியாக பலுசிஸ்தான் தீவிர வாதிகளை இந்தியா முடுக்கிவிடுகிறதே என பாகிஸ்தான் குற்றஞ்சுமத்தும். இதுவே இன்றைய நடைமுறை.

சமீபத்தில் கூட பலுசிஸ்தான் விவகாரத்தை பாகிஸ்தான் இழுத்தது. ஆனால், பலுசிஸ்தானில் இந்தியாவின் தலையீடு இல்லை என்று பலுசிஸ்தான் தலைவர்களே மறுத்துள்ளனர்.

இதுகுறித்து பலுசிஸ்தானின் கலாத் பகுதி மன்னரின் வாரிசான சுலேமான் கான் ரா, பலுசிஸ்தான் விவகாரத்தில் இந்தியா ஒருபோதும் தலையிட்டதில்லை. தற்போதும் தலையிடவில்லை என்று கூறியுள்ளார். இவர் லண்டனில் தஞ்சமடைந்து அங்கு வசித்து வருகிறார்.

சி.என்.என். - ஐ.பி.என். தொலைக்காட்சிக்கு சுலேமான் கான் இது தொடர்பாக பேட்டி அளித்துள்ளார். அதில் ''இந்தியா ஒருபோதும் பலுசிஸ்தான் விவகாரத்தில் தலையிட்டதில்லை. இந்தியா தலையிட்டு தீவிரவாதத்தைத் தூண்டுகிறது என உலக நாடுகளுக்குக் காட்ட பாகிஸ்தான் முயலுகிறது. ஆனால், இந்தியாவிடமிருந்து எங்களுக்கு உதவிகள் கிடைத்திருக்குமேயானால் நாங்கள் இந்த நிலைககு வந்திருக்க மாட்டோம்'' என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

''உண்மை என்னவெனில், பலுசிஸ்தான் தலைவர்கள் பலரும் இந்தியாவின் உதவியை விரும்புகின்றனர். ஆனால், இந்தியாதான் அதற்கு மறுப்பு தெரிவித்து வருகிறது. பலுச் போராட்டத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும், பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பிலிருந்து வெளியேற அது உதவ வேண்டும் என பலுசிஸ்தான் தலைவர்கள் கோரி வருகின்றனர். ஆனாலும் இந்தியா அதை ஏற்கவில்லை. அதற்கு செவிமடுக்கக்கூடிய நிலையிலும் இல்லை'' என்றும் அவர் கூறியுள்ளார்.

''உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்தியா. அது எங்களுக்காகக் குரல் கொடுத்தால் அதனால் மிகப்பெரிய பலன்கள் ஏற்படும். குறைந்த பட்சம், பலுசிஸ்தானில் நடைபெறுவது சரியல்ல என்று கூறினால் கூட போதும். ஆனால் இந்தியா அந்த உதவியைக் கூட செய்யாமலுள்ளது'' என்றும் சுலேமான் கான் கவலை தெரிவித்துள்ளார்.

### பலுசிஸ்தான்

பாகிஸ்தானின் எல்லைப்புற மாகாணம் பலுசிஸ்தான். ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளையொட்டி இது அமைந்துள்ளது. பாகிஸ்தானின் மிகப் பெரிய மாகாணமும் இது தான். மாகாணத் தலைநகர் குவெட்டா. இங்கு பலுச்சி இனத்தவர் பெரும்பான்மையாக உள்ளனர். இயற்கை எரிவாயு இங்கு அதிகம். சிந்து மாகாணத்தை அடுத்து இங்குதான் இயற்கை எரிவாயு அதிகம் கிடைக்கிறது.

பலுசிஸ்தானில் முன்பு மக்ரான், கரான், லாஸ் பெலா, கலாத் என நான்கு சமஸ்தானங்கள் இருந்தன. இவற்றை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ஒன்றாக ஒருங்கிணைத்து பலுசிஸ்தானை உருவாக்கினர்.

இந்தியாவைப் பிரித்து பாகிஸ்தான் உருவாக்கப்பட்டபோது, பலுசிஸ்தான், பாகிஸ்தானுடன் சேரவில்லை. 1948 ஆம் ஆண்டுதான் அது பாகிஸ்தானுடன் இணைந்தது.

பலுசிஸ்தானை தனிநாடாக்க வேண்டும், பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பிலிருந்து அது விடுபட வேண்டும் என்று கோரி அங்கு தொடர்ந்து போராட்டங்கள் நடந்தவண்ணம் உள்ளன. பல்வேறு குழுக்கள் இந்தப் போராட்டங்களை நடத்தி வருகின்றன. இந்தப் போராட்டங்களுக்கு இந்தியா மறைமுக ஆதரவு அளித்து வருகிறது என்பதுதான் பாகிஸ்தான் முன்வைக்கும் குற்றச்சாட்டாகும்.

## அணு ஆயுதங்கள் குறைப்பு: அமெ.-ரஷ்யா மீண்டும் பேச்சு

மாஸ்கோ, ஜூலை 29

அணு ஆயுதங்களைக் குறைப்பது தொடர்பாக அமெரிக்கா - ரஷ்யா இடையேயான பேச்சு செப்டம்பர் மாதம் மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 6 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கும் ரஷ்ய ஜனாதிபதி மெத்வதேவுக்குமிடையே மாஸ்கோவில் நடைபெற்ற பேச்சுகளின்போது அணு ஆயுதங்களைக் குறைப்பது தொடர்பாக இரு நாடுகளும் மீண்டும் பேசுவது என முடிவு செய்யப்பட்டது.

அதன்படி ஜெனீவாவில், செப்டெம்பர் மாத தொடக்கத்தில் அடுத்த சுற்றுப் பேச்சு நடைபெறவுள்ளது என்றும், இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பாகிஸ்தான் திரும்புவதை முஷாரப் ஒத்திவைத்தார்

லண்டன், ஜூலை 29



லண்டனில் தற்போது தங்கியிருக்கும் பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப், தாம் பாகிஸ்தான் திரும்புவதை ஒத்திவைத்துள்ளார். அவசரகால நிலைப் பிரகடனம் தொடர்பாக, நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு, உச்ச நீதிமன்றம் இவருக்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் நாடாளுமன்ற தேர்தலுக்குப் பின்னர் பதவி விலகினார். இப்போது இவர் லண்டனில் தங்கியிருக்கிறார். இவர் தாம் ஆட்சியிலிருந்த காலத்தில் நெருக்கடி நிலை பிரகடனம் செய்தார். அரசியல் சட்டத்தை இடைநிறுத்தம் செய்து விட்டு புதிய சட்டம் பிறப்பித்தார்.

இந்தச் சட்டத்தின்கீழ் நீதிபதிகள் பதவி பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இவர் நிர்ப்பந்தித்தார். இதற்குச் சம்மதிக்காத நீதிபதிகளை முஷாரப் பதவி நீக்கம் செய்தார். நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் பதவிக்கு வந்த சர்தாரி பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பதவியில் அமர்த்தினார்.

நெருக்கடி நிலை பிரகடனம் செய்தமையை ஆட்சேபித்து தற்போது உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் 29 ஆம் திகதி அதற்கான விளக்கத்தை அவர் நீதிமன்றத்தில் ஆஜராகியோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ தெரிவிக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் லண்டனிலிருந்து முஷாரப் பாகிஸ்தான் திரும்பவிருந்தார். ஆனால், இவர் பாகிஸ்தான் திரும்புவதை தள்ளிவைத்து விட்டார். இவர் நீதிமன்ற வழக்குத் தொடர்பாகசட்ட நிபுணர்களிடமும், இராணுவத்தில் பணியாற்றிய தன் நண்பர்களோடும் ஆலோசனை நடத்தினார். அதற்குப் பின்னர் இவர் இப்போதைக்கு பாகிஸ்தான் திரும்புவதில்லை என முடிவெடுத்துள்ளார்.

## மகாத்மா காந்தி தங்கிய வீடு தென்னாபிரிக்காவில் விற்பனை



டர்பன், ஜூலை 29

தென்னாபிரிக்காவில் மகாத்மா காந்தி தங்கியிருந்த வீடு தற்போது விற்பனைக்கு வந்துள்ளது. இந்த வீட்டில்தான் மகாத்மா காந்தி 3 ஆண் டுகள் தங்கியிருந்தார்.

இந்த வீடு விற்பனை செய்வதற்கான அறிவிப்பு வெளியாகியும், இதை வாங்க யாரும் ஆர்வம் காட்டவில்லை. தென்னாபிரிக்காவில் வாழும் இந்தியர்களில் சிலர் மட்டுமே சிறிதளவு ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஜோகன்னஸ் பார்க்கின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள இந்த வீடு மரங்கள் சூழ கட்டப்பட்டுள்ளது. மகாத்மா காந்திக்கு மிகவும் நம்பிக்கைக்கு உரியவராயிருந்த ஹெர்மான் கொலின் பேக் இந்த வீட்டை வடிவமைத்துள்ளார்.

மேற்கூரை வேயப்பட்ட இந்த வீட்டில் 1908 ஆம் ஆண்டிலிருந்து காந்தி 3 ஆண்டுகள் தங்கியிருந்தார். இந்த வீட்டின் உரிமையாளர் நான்சி போல் கடந்த 25 ஆண்டுகளாக இதில் வசித்து வந்தார். இவர் தற்போது கேப்டவுனுக்கு குடிபெயர திட்டமிட்டுள்ளார்.

பிரசித்தி பெற்ற இந்த வீட்டை வாங்க யாரும் ஆர்வம் காட்டாததால் அவர் விளம்பரம் கொடுத்து இதை விற்க முடிவு செய்துள்ளார் என்று அங்கிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன. இருப்பினும், இந்த வீட்டின் விலையை அவர் தெரிவிக்கவில்லை.

இதனிடையே விட்வாட்டர்ஸ்ராண்ட் பல்கலைக்கழகத்தின் இந்தியக் கல்வி குறித்த பிரிவை உருவாக்கிய ஸ்டீபன் கெல்பின் உதவியை நான்சிபோல் நாடியுள்ளார்.

இந்த வீட்டை வாங்கக்கூடிய இந்தியர்களை தேடி வருகிறார் ஸ்டீபன் கெல்ப். இந்த வீட்டை வாங்கி, இங்கு வரும் பேராசிரியர்கள் தங்கிச் செல்லும் இல்லமாக இதை மாற்றுவது குறித்தும் அவர் ஆராய்ந்து வருகிறார்.

இந்திய வம்சாவளி சமுதாயத்தினர் வெகு குறைவாகவே இப்பகுதியில் உள்ளனர். அவர்களில் யாரும் இந்த வீட்டை வாங்குவது தொடர்பாக ஆர்வம் காட்டவில்லை என்றும் கெல்ப் தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவில் ஜொகன்னஸ்பார்க்கில் மற்றொரு இடமும் மிகவும் பிரபலமானது. இங்குள்ள காந்தி பண்ணையில்தான் தனது ஆதரவாளர்களுடன் சத்யாக்கிரஹத்தை அவர் போதித்தார். தொடக்கத்தில் டர்பனின் வட பகுதியில்தான் மகாத்மா காந்தியின் ஆதரவாளர்கள் பலரும் குடியேறினர். இங்குதான் சத்யாக்கிரஹத்தை அவர் ஆரம்பித்தார்.

### மகாத்மா காந்தியின் தென்னாபிரிக்க பிரசன்னம்

★ 1893 ஆம் ஆண்டு, மகாத்மா காந்தி தென்னாபிரிக்கா வந்தடைந்தார்.

★ 1894 ஆம் ஆண்டு, அவரால் நத்தால் இந்தியர் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது.

★ 1903 ஆம் ஆண்டு, ''இந்திய ஒப்பினியன்'' வாராந்த இதழ் அவரால் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1907 ஆம் ஆண்டு, தென்னாபிரிக்காவில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஆசியர்கள் கட்டாயப் பதிவுத்திட்டத்துக்கெதிரான சாத்வீக எதிர்ப்புப் போராட்டம் நடத்தினார்.

★ 1914 ஆம் ஆண்டு, இந்தியா திரும்பினார்.

## ஆங் சான் சூகி மீதான விசாரணை இறுதிக் கட்டத்தில்; வெள்ளியன்று தீர்வு

யங்கூன், ஜூலை 29

மியான்மரின் ஜனநாயகக் கட்சித் தலைவி ஆங் சான் சூகி மீதான விசாரணை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இரு தரப்புச் சட்டத்தரணிகளும் தங்களது இறுதிக்கட்ட வாதத்தை முன்வைக்க உள்ளனர். எனவே, வழக்கு விசாரணை விரைவில் முடிந்து தீர்ப்பு வெளியாகும் என அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

64 வயதான மியான்மரின் ஜனநாயகக் கட்சித் தலைவி ஆங்சான் சூகி வீட்டுக் காவலை மீறியுள்ளார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் அவரது வீட்டில் இரண்டு நாள்கள் தங்கியிருந்தார் என்றும் கூறப்படுகிறது.

வீட்டுக் காவலில் இருப்பவர்கள், வெளிநாட்டவர்களைச் சந்திக்கக்கூடாது என்பது விதியாகும். இந்தக் குற்றம் நிரூபிக்கப்பட்டால், ஆங் சான் சூகிக்கு 5 ஆண்டுகாலச் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியாகலாம் என்று ஆங் சான் சூகியின் சட்டத்தரணி நியான் வின் தெரிவித்தார்.



இந்த வழக்கு விசாரணையின் போது அமெரிக்கா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, ஜப்பான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தூதர்கள் பிரசன்னமாயிருந்தனர். மியான்மருக்கான அமெரிக்கத் தூதர் இல்லை. இதற்குப் பதிலாக துணைத் தூதர் லாரி டிங்கர் பங்கேற்றார்.

ஆங்சான் சூகியைச் சந்தித்த அமெரிக்கர் ஜோன் டபிள்யூ. யெட்டாவுக்கு அதிகபட்சம் மூன்று மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என தெரிகிறது. குடியேற்ற விதிகளை மீறியமை, நீச்சல் குளமல்லாத பகுதியில்குளித்தமை ஆகியவை உள்ளிட்ட குற்றங்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

ஆங் சான் சூகி கொல்லப்படுவதைப் போல தான் கனவு கண்டார் என்றும் அது குறித்து அவரை எச்சரிக்கை செய்யவே அவரை தான் சந்தித்தார் என்றும் நீதிமன்றத்தில் யெட்டா தெரிவித்தார்.

## இந்தோனேஷிய தேர்தல் முடிவுகள் மீளாய்வு செய்யப்படவேண்டும்

### முன்னாள் ஜனாதிபதி மேகவதி சுகர்னோபுத்திரி

ஜகர்த்தா, ஜூலை 29

இந்தோனேஷியாவில் அண்மையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் மீளாய்வு செய்யப்படவேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மேகவதி சுகர்னோபுத்திரி கோரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் நியாயமானவையாக அமையவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தேர்தல் முடிவுகள் தொடர்பாக பல்வேறு தீர்க்கப்படாத சர்ச்சைகள் உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் மேகவதி 28 வீத வாக்குகளைப் பெற்றுள்ளார். ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட சுசிலோ பாம்பங் 60 வீத வாக்குகளைப் பெற்றுள்ளார்.

மூன்றாவது வேட்பாளராகப் போட்டியிட்ட துணை ஜனாதிபதி ஜூசுப் காலாவும் இந்தத் தேர்தல் முடிவுகளை மீளாய்வு செய்யவேண்டுமென கோரியுள்ளார்.

இந்தோனேஷிய ஜனாதிபதித் தேர்தல் குறித்து வெளியான உத்தியோகபூர்வ முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என முன்னாள் ஜனாதிபதி மேகவதி சுகர்னோபுத்திரி தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசியல் சாசன நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சமீபத்திய இந்தோனேஷிய ஜனாதிபதித் தேர்தலில் பல்வேறு குளறுபடிகள் இடம்பெற்றுள்ளன என [illegible] சுட்டிக்காட்டியுள்ளனர்.

## இந்தியாவின் அணுசக்தி நீர்மூழ்கி கப்பலுக்கு பாகிஸ்தான் எதிர்ப்பு

கராச்சி, ஜூலை 29

இந்தியாவின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலால் இந்தியக் கடல் பகுதியில் நிச்சயமற்ற நிலை உருவாகும் என பாகிஸ்தான் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இந்தியாவின் முதல் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலான அரிஹந்த்தை பிரதமர் மன்மோகன்சிங் ஞாயிற்றுக்கிழமை விசாகப்பட்டினத்தில் உத்தியோகபூர்வமாகக் கடற்படையிடம் கையளித்தது தெரிந்ததே.

ரஷ்யாவின் ஒத்துழைப்புடன் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தக் கப்பலிலிருந்து ஒரே நேரத்தில் தொடர்ச்சியாக 12 ஏவுகணைகளை 700 கி.மீ. தூர இலக்கைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்த முடியும். இந்த அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டு பாகிஸ்தான் கலக்கம் அடைந்துள்ளது.

அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் இந்தியக் கப்பற்படையில் சேர்க்கப்பட்டிருப்பது குறித்து கராச்சி நகரில் பாகிஸ்தான் இராணுவ அமைச்சர் சௌத்ரி அகமது முக்தாரிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அவர் இதற்கு பின்வருமாறு பதில் அளித்துள்ளார்:-

''இந்தப் பிரச்சினையை (அரிஹந்த் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்) பாகிஸ்தான் முழுமை [illegible]. இதை அனைத்து வழிகளிலும் எதிர்கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கிறோம். இதுபோன்ற சவால்களை எதிர்கொள்ள பாகிஸ்தான் இராணுவம் தயாராக உள்ளது.

''நாங்கள் எந்தப் போரையும் விரும்பவில்லை. ஆனால், எம்மை நாம் எவ்வாறு தற்காத்துக் கொள்ளவேண்டும் என்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும். இதுபோன்ற அனைத்துவித சவால்களையும் எதிர்கொள்ளும் ஆற்றல் பாகிஸ்தானுக்கு உண்டு.''

மேற்கண்டவாறு சௌத்ரி அகமது முக்தார் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் கப்பற்படைச் செய்தித் தொடர்பாளர் ஒருவர் நிருபர்களிடம் கூறுகையில், ''இந்தியாவின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலால் இந்தியக் கடல் பகுதி முழுவதிலும் நிச்சயமற்ற நிலை உருவாகும்'' எனத் தெரிவித்துள்ளார்.

''இந்த அணுசக்திக் கப்பலின் ஆயுதங்கள் பாகிஸ்தானை மட்டுமன்றி, இந்திய பெருங்கடல் பகுதியையும் அதனைச் சுற்றியுள்ள கடற்கரையோர நாடுகளையும் எட்டும் அளவில் உள்ளன. இந்த நடவடிக்கையால் இந்தப் பிராந்தியத்தில் அணு ஆயுதப் போட்டி உருவாகும். தனக்கென அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை உருவாக்குவது குறித்து பாகிஸ்தான் அரசு முடிவு செய்யும். எனினும் அரசு எடுக்கும் எந்த முடிவையும் கப்பற்படை அமுல்படுத்தத் தயாராக உள்ளது'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாவிரதக் களத்தில் நளினி!

## சிறையில் 4 நாள்களாகத் தொடர்கிறது

வேலூர், ஜூலை 29

வேலூர் பெண்கள் தனிச் சிறையிலுள்ள நளினி திடீரென உண்ணாவிரதக் களத்தில் குதித்துள்ளார். நேற்றுமுன்தினம் அவர் 4ஆவது நாளாக உண்ணாவிரதம் இருந்தார். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஒரு பெண் கைதிக்கு அளிக்கப்பட்ட தண்டனையை வெளியே சொன்னமையால், தன்னை சிறை அதிகாரிகள் துன்புறுத்துகின்றனர் எனக் கூறி, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நளினி உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

மேலும், தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை பரிசீலிக்க குழு அமைக்க வேண்டும், சிறையில் முதல் வகுப்பு வசதி அளிக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தியும் இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஆனால், அவ்வாறு நளினி உண்ணாவிரதம் ஏதும் இருக்கவில்லை என சிறைத் துறையினர் மறுத்துள்ளனர்.

ராஜீவ் கொலை வழக்கில் தண்டனைபெற்ற நளினி, வேலூர் பெண்கள் தனிச்சிறையில் அடைக்



கப்பட்டுள்ளார். இதே சிறையில் கடந்த டிசெம்பர் 24 ஆம் திகதி சாரதா (வயது - 45) என்பவர், திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டார்.

இவரது பணத்தை சிறைக்காவலர்கள் பறித்துக் கொண்டு, சாரதாவை நிர்வாணப் படுத்தி துன்புறுத்தினராம். சாரதா தரப்பில் சட்டத்தரணி புகழேந்தி, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நஷ்ட ஈடாக 50 ஆயிரம் ரூபா தர வேண்டும். பணியிலிருந்த பொலிஸார் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிபதிகள் தர்மாராவ், செல்வம் ஆகியோர் கொண்ட ஆயம் உத்தர விட்டுள்ளது.

இதன் காரணமாக நளினியிடம் சில அதிகாரிகள் கோபமாக நடந்துகொள்வதால் இதைக் கண்டித்து நளினி கடந்த 4 நாள்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார் எனவும் திங்கட்கிழமை செய்திகள் வெளியாகின.

இதுகுறித்து பெண்கள் தனிச்சிறை துணைத் தலைவர் ராஜசௌந்தரி கூறுகையில் -

முதல் வகுப்புச் சிறை கேட்டு நளினி மனு செய்திருந்தார். அதுதொடர்பாக சிறைத்துறை பரிசீலித்து வருவதால், மனு நிலுவையில் இருக்கிறது. அதற்காக, நளினி உண்ணாவிரதம் இருக்கிறார் எனத் திட்டமிட்டே சிலர் தவறான தகவல்களைப் பரப்புகின்றனர் - என்றார்.

## இலங்கைத் தமிழர்களுக்கு இன்று உதவி வழங்குகிறார் ஸ்ரீசக்தி அம்மா

வேலூர், ஜூலை 29

இலங்கையில் அரங்கேறிய கொடூர யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களை, வேலூர் ஸ்ரீசக்தி அம்மா இன்று நேரில் சந்தித்து நிவாரண உதவிகளை வழங்குகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வேலூர் ஸ்ரீ நாராயணி பீட நிறுவுநர் ஸ்ரீசக்தி அம்மா ஆன்மிகப் பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ளார். அவர் அங்கிருந்து நேரடியாக இன்று புதன்கிழமை இலங்கை செல்கின்றார்.

அங்கு நடைபெற்ற கொடிய யுத்தத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழர்களை நேரில் சந்தித்து நிவாரண உதவிகளை வழங்குகிறார்.

## 6 நாள்களாகத் தொடர்ந்த உண்ணாவிரதம்:

# செங்கல்பட்டில் உள்ள ஈழ அகதிகளுக்கு குடும்பங்களுடன் சேர்ந்து வாழ அனுமதி

செங்கல்பட்டு, ஜூலை 29

செங்கல்பட்டு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள், தமது குடும்பங்களுடன் சேர்ந்து வாழ அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கியூப் பிரிவுப் பொலிஸாரால் பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை அகதிகள் 85 பேர் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 63 பேர் தங்கள் மீதுள்ள வழக்குகளை விரைவில் முடித்து தங்களை குடும்பங்களுடன் சேர்ந்து வாழவிட வேண்டும். அமைச்சர்கள் அல்லது முதலமைச்சரின் பிரதிநிதிகள் தங்களுடன் பேச்சு நடத்தவேண்டும் என வலியுறுத்தி பிடிவாதமாக கடந்த 6 நாள்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த முத்து, சத்தியமூர்த்தி ஆகிய இருவர் மயங்கி விழுந்தனர். பின்னர் அவர்கள் செங்கல்பட்டு அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களுடன் அதிகாரிகள் பேச்சு நடத்தினர். அதன் அடிப்படையில், குடும்பங்களுடன் சேர்ந்து வாழ அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# காஷ்மீர் சட்டசபையில் அமளி; சபாநாயகர் மீது 'மைக்' வீச்சு!

## எதிர்க்கட்சித் தலைவர் மெகபூபா கைவரிசை



ஸ்ரீநகர், ஜூலை 29

காஷ்மீர் சட்டசபையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கடும் அமளியின்போது, எதிர்க்கட்சித் தலைவர் மெகபூபா முப்தி, ஒலிவாங்கியை (மைக்கை) பிடுங்கி சபாநாயகர் மீது வீசி எறிந்தார். இதையடுத்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கூண்டோடு வெளியேற்றப்பட்டனர்.

சட்டப் பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் தொடங்கியது. கூட்டம் தொடங்கியவுடன், ஆளும் தேசிய மாநாடு கட்சி உறுப்பினர் சௌத்ரி முகமது ரம்ஜான், முக்கியமான பிரச்சினை பற்றி விவாதிக்க வேண்டும் என்று சபாநாயகர் முகமது அக்பரிடம் கூறினார். இதற்கு எதிர்க்கட்சியான மக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

சோபியானில் 2 பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி விவாதிக்க வேண்டும். அதைவிட வேறு முக்கிய பிரச்சினை எதுவும் இல்லை என்று மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர். இதற்கு ஆளும் தேசிய மாநாட்டு கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவே அவையில் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. அவையில் அமைதி ஏற்படுத்த சபாநாயகர் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

இதையடுத்து, மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவர் மெகபூபா முப்தியை பார்த்து சபாநாயகர் சில வார்த்தைகளைக் கூறினார். இதையடுத்து, ஆத்திரமடைந்த மெகபூபா, சபாநாயகர் இருக்கைக்குச் சென்று அவர் முன் இருந்த மைக்கை பிடுங்கி வீசி எறிந்தார். மற்றொரு மைக்கையும் அவர் பறிக்க முயற்சித்தபோது, மக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்ற காவலர்களுக்கு சபாநாயகர் உத்தரவிட்டார். இதையடுத்து, மக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர்களை வலுக்கட்டாயமாக காவலர்கள் வெளியேற்றினர்.

# இடைத்தேர்தலில் கம்யூ. தனி அணியாக முதல் முறையாக தமிழகக் களத்தில்!

கோவை, ஜூலை 29

கடந்த 1964இல் தேசிய அளவில் கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவால் மார்க்சிஸ்ட் உருவானது. அதன்பின் 67, 71, 77 தேர்தல் வரை 2 கம்யூனிஸ்ட் கட்சிகளும் எதிரெதிர் அணிகளில் போட்டியிட்டன.

1989 சட்டப் பேரவை பொதுத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் மார்க்சிஸ்ட்டும், அ.தி.மு.க. அணியில் கம்யூனிஸ்ட்டும் இடம்பெற்றன. மீண்டும் 1996 இல் தி.மு.க. கூட்டணியில் இந்தியக் கம்யூனிஸ்ட்டும், ம.தி.மு.க. கூட்டணியில் மார்க்சிஸ்ட்டும் இடம் பெற்றிருந்தன.

கடந்த மக்களவைத் தேர்தலில், தே.மு.தி.க. தலைமையில் அணி அமைக்க மார்க்சிஸ்ட் விரும்பியது. அ.தி.மு.கவுடன் அணி சேர இந்தியக் கம்யூனிஸ்ட் முடிவு எடுத்தது. கடைசியில், மார்க்சிஸ்ட்டும் அ.தி.மு.க. அணியில் சேர்ந்தது.

தற்போது, தொண்டாமுத்தூர் உட்பட 5 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலை அ.தி.மு.க. புறக்கணிப்பதாக அறிவித்து, அதில் உறுதியாக உள்ளது. இதனால், முதல் முறையாக இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் தனி அணியாகப் போட்டியிடுகின்றன.

தொண்டாமுத்தூர் தவிர மற்ற 4 தொகுதிகளில் இடதுசாரிகளுக்கு குறிப்பிடும்படி செல்வாக்கு இல்லை. ஆனாலும், துணிச்சலுடன் தனி அணியாகப் போட்டியிடுகின்றன.

தொழிற்சங்க அமைப்புகள் மூலம் தங்கள் பலத்தை வெளிக்காட்டி வரும் கம்யூனிஸ்ட்களுக்கு இடைத்தேர்தலில் தனித்துப் போட்டி என்பது சவால்தான். ஆனால், இடைத்தேர்தலில் கிடைக்கும் வாக்குகள், மக்கள் மத்தியில் தங்களுக்குள்ள செல்வாக்கை எடைபோடவும், எதிர்கால அரசியல் நிலைப்பாடுகளுக்கு பயனளிப்பதாகவும் இருக்கும் என கம்யூனிஸ்ட் கட்சியினர் கருதுகின்றனர்.




# சூடு பிடிக்கிறது இடைத்தேர்தல்; இன்று முடிகிறது மனுத் தாக்கல்

சென்னை, ஜூலை 29

தமிழகத்தில் 5 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. நேற்றுமுன்தினம் ஒரேநாளில் 22 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்தனர். மனுத் தாக்கல் இன்று முடிகிறது.

இடைத்தேர்தல் நடைபெறும் தொண்டாமுத்தூர், பர்கூர், கம்பம், இளையான்குடி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய தொகுதிகளில், கடந்த 22 ஆம் திகதி வேட்பு மனுத் தாக்கல் தொடங்கியது. சனிக்கிழமை வரை தொண்டாமுத்தூர் தொகுதியில் 4 பேரும், பர்கூர் தொகுதியில் 6 பேரும், கம்பம் தொகுதியில் 2 பேரும், இளையான்குடி தொகுதியில் 3 பேரும் மனுத் தாக்கல் செய்திருந்தனர். ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒருவர் மட்டுமே மனுத் தாக்கல் செய்திருந்தார்.

சனிக்கிழமை வரை மனுத் தாக்கல் செய்தவர்கள் அனைவரும் சுயேச்சைகள். மனுத் தாக்கல் தொடங்கி 6 ஆவது நாளான நேற்றுமுன்தினம்தான் அரசியல் கட்சி வேட்பாளர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்தனர்.

பர்கூரில் கே.அசோகன் (பா.ஜ.க.), ஜி.சிவப்பிரகாஷ் (பா.ஜ.க. மாற்று), வி.சந்திரன் (தே.மு.தி.க.), கே.ஆர்.கிருஷ்ணன், ஆர்.மணிகண்டன் (சுயேச்சைகள்) என 5 பேர் நேற்றுமுன்தினம் மனுத் தாக்கல் செய்தனர்.

வேட்பு மனுத் தாக்கல் செய்ய இன்று கடைசி நாள். வேட்புமனு பரிசீலனை 30 ஆம் திகதி நடக்கிறது. ஓகஸ்ட் முதலாம் திகதி மனுக்கள் வாபஸ் வாங்க கடைசி நாள். ஓகஸ்ட் 18 ஆம் திகதி வாக்குப்பதிவு நடக்கிறது. ஓகஸ்ட் 21ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடக்கிறது.

# இந்தியா - பாக். கூட்டறிக்கை விவகாரத்துக்கு மக்களவையில் பிரதமர் இன்று முற்றுப்புள்ளி

## காங்கிரஸ் நம்பிக்கை

டில்லி, ஜூலை 29

இந்தியா - பாகிஸ்தான் கூட்டறிக்கை விவகாரத்தால் எழுந்துள்ள சர்ச்சைக்கு பிரதமர் மன்மோகன் சிங் இன்று நாடாளுமன்றத்தில் முற்றுப்புள்ளி வைப்பார் - என்று காங்கிரஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங்கும், பாகிஸ்தான் பிரதமர் கிலானியும் கையெழுத்திட்டு எகிப்தில் வெளியிட்ட கூட்டறிக்கையில், தீவிரவாதிகள் மீதான நடவடிக்கைக்கும், சமரசப் பேச்சுக்கும் தொடர்பில்லை என்ற வாசகம் இடம்பெற்று இருந்தது. இதற்கு பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

இந்நிலையில் அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனார்த்தன் திவேதி டில்லியில் செய்தியாளர்களிடம் கூறுகையில் -



பிரதமர் மன்மோகன் சிங் 29ஆம் திகதி (இன்று) நாடாளுமன்றத்தில் பேசும் போது, இந்தியா - பாகிஸ்தான் கூட்டறிக்கை தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பார். அரசின் நிலை என்ன என்பதையும் தெளிவாக அறிவிப்பார். எல்லா சந்தேகங்களுக்கும், அச்சங்களுக்கும் தீர்வு ஏற்பட்டு விடும். இந்த விடயத்தில் பிரதமருக்கு காங்கிரஸ் முழு ஆதரவளிக்கும் - என்றார்.

# திரைத்துறைக்கும் அரசியலுக்கும் வெகுதூரம்; காலம் கனியும்வரை காத்திருக்க வேண்டும்!

## நடிகர் விஜய் கூறுகிறார்

புதுவை, ஜூலை 29



திரைத்துறைக்கும் அரசியலுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. தற்போது அரசியல் தலைவர்களின் புத்தகங்களைப் படித்து வருகிறேன். எதற்கும் காலம் கனியும் வரை காத்திருக்க வேண்டும் - என்று நடிகர் விஜய் கூறினார்.

'விஜய் மக்கள் இயக்கம்' சார்பில் புதுக்கோட்டையில் ஞாயிறன்று கணனி மையம் தொடங்கப்பட்டது. இதைத் திறந்துவைத்துப் பேசிய அவர், மேலும் கூறியவை வருமாறு -

எந்தத் துறையில் இறங்கினாலும் அதில் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற லட்சியம் சிறு வயது முதலே என்னுள் வேரூன்றிவிட்ட விடயம்.

திரைத்துறைக்கும் அரசியலுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. கடலில் இறங்கும் போது எப்படி சுழலையும் ஆழத்தையும் அறிந்து இறங்க வேண்டுமோ அதேபோல, அரசியலில் இறங்க எச்சரிக்கையும் நல்ல பக்குவமும் தேவை. நான் ஆல மரமாக இருக்க விரும்புகிறேன்.

ஏனெனில் எந்தப் புயலுக்கும் ஆல மரம் கீழே சாய்ந்து விழாது. மக்கள் இயக்கத்தில் மாவட்டத் தலைநகரங்களில் ஒரு லட்சம் உறுப்பினர்களையும் ஒன்றியப் பகுதிகளில் 50 ஆயிரம் உறுப்பினர்களையும் சேர்க்க வேண்டும். அதை ரசிகர்களாகிய நீங்கள்தான் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் குடும்பத்தையோ மற்ற விடயங்களையோ பெரிதாகக் கருதாமல் மக்கள் நலன், நாட்டின் வளர்ச்சி போன்றவற்றை மட்டுமே முக்கியமாகக் கருதுவேன்.

தற்போது அரசியல் தலைவர்களின் புத்தகங்களைப் படித்து வருகிறேன். காலம் கனியும் வரை காத்திருக்க வேண்டும் - என்றார்.

# தமிழகத்தை இரு மாநிலங்களாக பிரிக்க வலியுறுத்தி ஓக. 19 இல் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 28

தமிழ்நாட்டை வட தமிழகம், தென்மாநிலம் என இரண்டாக பிரிக்க வலியுறுத்தி சென்னையில் வரும் ஓகஸ்ட் 19 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தவிருப்பதாக வட தமிழகம், தென்மாநிலக் கூட்டமைப்பின் நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து வடதமிழக அமைப்பின் தலைவர் வ.கே.நடராஜன், தென்மாநில அமைப்பின் தலைவர் என்.சேதுராமன், பா.ம.மு.க. நிறுவுநர் தலைவர் சி.என்.ராமமூர்த்தி, மூவேந்தர் முன்னேற்றக்கழகத்தின் பொதுச்செயலாளர் இசக்கிமுத்து ஆகியோர் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

இந்தியா சுதந்திரம் அடைந்த போது 11 மாகாணங்களாக இருந்தது. இந்தியாவை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்லும் நோக்கில் புதிய சட்டம் இயற்றி 32 மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. தென்மாவட்டங்களில் தொழிற்சாலையின்மையால் தென்மாநிலத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. வடதமிழகத்தில் மக்கள் நெருக்கடியால் விவசாய நிலங்கள் குடியிருப்புகளாக மாறி போக்குவரத்து நெரிசல், சுற்று சூழல் பாதிப்பு போன்றவைகள் ஏற்படுகிறது.

இதனால் தமிழகத்தை காவிரிக் கரையை எல்லையாக வைத்து இந்திய இறையாண்மைக்கு உட்பட்டு வடதமிழகம், தென்மாநிலம் என இரண்டாகப் பிரிக்க வேண்டும். இதை வலியுறுத்தி முதன் முறையாக ஓகஸ்ட் 19 இல் சென்னையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம் - என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சலஞ்சர் டென்னிஸ் போட்டித் தொடர்'

# சம்பியனானார் சானியா!

புதுடில்லி, ஜூலை 29

லெக்சிங்ஸன் சலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்திய வீராங்கனையான சானியா மிர்ஷா சம்பியன் பட்டம் வென்றார். இந்தப் போட்டியில் பட்டம் வென்றதன் மூலம் சானியா மிர்ஷா உலக ஒற்றையர் தர வரிசையில் 83ஆவது இடத்திலிருந்து 3 இடங்கள் முன்னேறி 80ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

சர்வதேச டென்னிஸ் சம்மேளனம் சார்பாக லெக்ஸிங்ஸன் சலஞ்சர் டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்தது.

இதன் ஒற்றையர் பிரிவில் இறுதிப் போட்டியில் உலகத் தர வரிசையில் 83ஆவது இடத்தில் இருந்த இந்திய வீராங்கனையான சானியா மிர்ஷா, 63ஆம் நிலை வீராங்கனையான பிரான்ஸின் ஜூலி காயினை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் முதல் செற் 'டைபிரேக்கர்' வரை சென்றது. அதில் சானியா சிறப்பாகச் செயற்பட்டு அதனை தன்வசப்படுத்தினார். அடுத்த செற்றில் காயின் முதலில் முன்னணி வகித்தாலும், அதனைத் தொடர்ந்து தக்கவைக்க முடியவில்லை.

முடிவில் சானியா மிர்ஷா 7-6 (7-5), 6-4 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினர். சம்பியன் பட்டம் வென்ற அவருக்கு 62 லட்சம் ரூபா பரிசாகக் கிடைத்தது.



சமீபத்தில் திருமண நிச்சயதார்த்தம் செய்த சானியா அதன் பின்னர் வென்ற முதல் பட்டம் இதுவாகும்.

லெக்சிங்ஸன் சலஞ்சர் டென்னிஸ் போட்டியில் பட்டம் வென்றதன் மூலம் சானியா மிர்ஷா உலக ஒற்றையர் தர வரிசையில் 83ஆவது இடத்திலிருந்து 3 இடங் கள் முன்னேறி 80ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

அதே நேரத்தில் அவர் இரட்டையர் பிரிவில் 10 இடங்கள் பின்தங்கி 49ஆவது இட த்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

உலக பெண்கள் ஒற்றையர் தர வரிசையில் ரஷ்ய வீராங்கனையான தினரா சபீனா தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார். ஆண்கள் பிரிவில் சுவிட்ஸர்லாந்து வீரரான ரோஜர் பெடரர் முதலிடம் வகிக்கிறார்.

இரட்டையர் பிரிவில் இந்திய வீரர்கள் லியாண்டர் பயஸ் 6ஆவது இடத்திலும், மகேஷ்பூபதி 8ஆவது இடத்திலும் நீடிக்கின்றனர்.

## '2010 கொமன் வெல்த்' போட்டிக்காக

# இந்தியா வருகிறார் மின்னல் மனிதன்



இந்தியாவில் நடைபெறவுள்ள 2010ஆம் ஆண்டுக்கான கொமன் வெல்த் போட்டியில் கலந்து கொள்வதற்காக 'மின்னல் மனிதன்' உசைன் போல்ட் (ஜமைக்கா) நிச்சயமாக வருவார் என இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் சுரேஷ் கல்மாடி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு-

''ஜமைக்கா உட்பட கொமன் வெல்த் போட்டியில் கலந்து கொள்ள இருக்கும் நாடுகள் சிறந்த அணிகளை அனுப்புவது உறுதி. எல்லா நாடுகளில் இருந்தும் சிறந்த வீரர்கள் இங்கு வருவார்கள். ஜமைக்காவின் 'மின்னல் மனிதன்' உசைன் போல்ட்டும் இந்தியா வருவார். ஏனெனில் ஒலிம்பிக் போட்டிக்கு அடுத்து கொமன்வெல்த் போட்டிதான் பெரிய விளையாட்டுத் திருவிழா'' - என்றார்.

# 'பார்முலா-1' கார் பந்தயத்தில் பிரேஸில் வீரர் மாசா காயம்!



'பார்முலா-1' கார் பந்தய போட்டியின் 10ஆவது சுற்றான அங்கேரி கிராண்ட்பிரி பந்தயம் புடா பெஸ்டில் நடந்தது. இதன் தகுதி சுற்றில் பிரேஸில் வீரர் பெலிப் மாசா மோதுண்டு விபத்துக்குள்ளானார். அவரது மண்டை ஓட்டில் முறிவு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவருக்கு அவசர சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. தற்போது அவரது உடல் நிலை சீராக இருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து வீரர் ஹமில்டன் வெற்றி பெற்றார் என்பது தெரிந்ததே.

# மீண்டும் சர்ச்சையில் அக்தர்!

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சர்ச்சைக்குரிய வேகப்பந்து வீச்சாளர் சொய்ப் அக்தர் மீண்டும் சர்ச்சையில் சிக்கியுள்ளார். தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் அக்தர் பங்கேற்று பேசியமையே பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் அனுமதி பெறாமல் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்கக்கூடாது என்ற விதி முறையை மீறியதற்கு விளக்கம் அளிக்கும் படி அவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதில் வருகிற 31ஆம் திகதிக்குள் பதில் அளிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.



இந்த நிலையில் அக்தரின் கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து விட்டது எனவும், அதிசயம் நிகழ்ந்தால் தான் அவரால் தேசிய அணிக்குத் திரும்ப முடியும் என்றும் பாகிஸ்தான் அணி முன்னாள் தலைவர் வாசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

# ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடுவதற்காக டெஸ்ட்டைப் புறக்கணிக்கும் நாள் தூரமில்லை

## வீரர்களின் கைகளிலேயே முடிவு என்கிறார் இந்திய அணியின் பயிற்சியாளர் கேரி

''பணமழை பொழியும் ஐ.பி.எல். போன்ற 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டிகளில் விளையாடினால் போதுமானது. டெஸ்ட் கிரிக்கெட்டை 5 நாள் உடல் நோக விளையாட வேண்டிய தேவையில்லை என்று வீரர்கள் முடிவு செய்யும் காலம் தூரத்தில் இல்லை. எனவே, வீரர்கள் தங்களது முன்னுரிமை எது என்பதனை முடிவு செய்துகொள்ளவேண்டும்'' - என்று இந்திய அணியின் பயிற்சியாளர் கேரி கேர்ஸ்டன் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்காவில் நேற்றுமுன்தினம் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

''இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் அன்ட்ரு பிளின்ரொப் போலவே ஏனைய வீரர்களும் முடிவெடுக்க நேரிடலாம்.

''டெஸ்ட் கிரிக்கெட் மெல்ல மறைந்து, ஒரு சுற்றுப்பயணம் என்றால் ஆறு 'ருவென்ரி-20' போட்டிகள், 2 அல்லது 3 ஒரு நாள் போட்டிகள் என்பதாக மாறிவிடும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே தோன்றுகிறது.

''மேலும் டெஸ்ட் போட்டிகளில் உடல் நோக நான் ஏன் அதிக ஓவர்களை வீச வேண்டும், 4 ஓவர்களை வீசி டெஸ்ட் கிரிக்கெட்டை விட மும்மடங்கு சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ள போது- என்று வீரர்கள் நினைக்கும் காலமும் அதிக தூரத்தில் இல்லை.

''டெஸ்ட் கிரிக்கெட் நிலைக்கும் என்ற வாய்ப்பேச்சை விடுத்து இதற்கான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம். இந்தியா இந்த ஆண்டு 6 டெஸ்ட் போட்டிகளை மட்டுமே விளையாடியுள்ளது. இது போதுமானதா- என்று எனக்குத் தெரியவில்லை.

''தற்போது அடுத்த ஆண்டு ஐ.பி.எல். கிரிக்கெட்டை நியூஸிலாந்து வீரர்கள் புறக்கணிக்க முடிவு செய்து ஆவுஸ்திரேலியாவிற்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட்தான் முக்கியம் என்று முடிவெடுத்துள்ளனர்.

''இந்திய அணி வீரர்களும் எது முக்கியமான போட்டி என்பதைத் தாமே தீர்மானிக்கவேண்டும்''- என்றார் அவர்.

ஆனால், நீண்ட காலத்திற்கு பணம் வேண்டாம் என்ற முடிவில் அவர்களைத் தக்க வைப்பது கடினம் என்று நியூஸிலாந்து அணியின் வீரர் டானியல் விக்ரோரி கூறியிருக்கின்றமையும், கேரி கர்ஸ்டன் கூறியிருக்கின்றமையும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

# 50 ஓவர்கள் கிரிக்கெட்டை ஒழிக்கவேண்டும் - ஷேர்ன்வோர்ன்



பிரிஸ்பேர்னில் சமீபத்தில் நடைபெற்ற சுழற்பந்து வீச்சாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட ஷேன் வோர்ன், 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளை முதலில் ஒழிக்க வேண்டும், அப்படிச் செய்தால், டெஸ்ட் கிரிக்கெட்டும், 'ருவென்ரி-20' கிரிக்கெட்டும் சுவாரஸ்யமாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

50 ஓவர்கள் ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளை உடனே நீக்கவேண்டும். அவ்வாறு செய்தால் டெஸ்ட் கிரிக்கெட்டும், தாக்குதல் பாணியிலான 'ருவென்ரி-20' கிரிக்கெட்டும் வளரும்.

''மேலும் வீரர்களும் முழு மூச்சுடன் உள் நாட்டு கிரிக்கெட்டில் பங்கேற்கவும் கால அவகாசம் இருக்கும்'' என்று கூறினார் ஷேன் வோர்ன்.

# ஓய்வு முடிவில் மாற்றமில்லை -யூனிஸ்கான்

நான் ஓய்வு பெறும் முடிவிலிருந்து மாறமாட்டேன் என பாகிஸ்தான் அணியின் தலைவர் யூனிஸ்கான் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் நடந்த 'ருவென்ரி-20' உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி சம்பியன் பட்டத்தை வென்றதும் அந்த அணியின் தலைவரான யூனிஸ்கான் 'ருவென்ரி -20' போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப்போகிறார் என அறிவித்தார்.

அத்துடன், டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டியில் தொடர்ந்து விளையாடுவார் என்றும் அறிவித்து இருந்தார். இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் பலர் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.


BIT@ESOFT
The Leader in Professionl ICT Education
Bachelor Of Information Technology - University of Colombo School of Computing

BIT கற்கை நெறிக்கு தொடர்ச்சியாக இலங்கையின் NO.1 நிறுவனமாக திகழும் ESOFT நிறுவனத்தின் யாழ் கிளையில் புதிய பிரிவுகள் 01.08.2009 அன்று ஆரம்பம். உங்கள் பதிவுகளை 31.07.2009 ற்கு முன்பு எமது யாழ் கிளையில் மேற்கொள்ளவும்.

எமது தனித்துவத்தின் சான்றுகள்


The Gold Medalist in 2008 BIT Convocation

ISO 9001 : 2008 Certified Institute
மாணவர்களே...!
BIT கற்கைநெறிக்கு இலங்கையின் No1 நிறுவனத்தில் இணைவதற்கு உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
Hotline 077-3099308


First Class Degree Holder In 2007 BIT Convocation

ESOFT
The Leader in Professionl ICT Education
Esoft Computer Studies (Pvt) Ltd
(Regional Head Office)
www.esoft.lk 0212224142



கண்டெடுத்துத் தருவோருக்கு தகுந்த சன்மானம்

கிறிஸ்ரியன் லியோ என்ற என்னுடைய கனடா அடையாள அட்டை மற்றும் எனது கனடா ஆவணங்களுடன் எனது பேர்ஸ் யாழ்.நகரப் பகுதியில் நேற்று தொலைந்துவிட்டது. அதில் இருந்த என்னுடைய மேற்படி ஆவணங்கள் எனக்கு முக்கியமானவை. அவற்றைக் கண்டெடுத்து ஒப்படைப்போருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

0777044253 என்ற தொலைபேசி மூலம் தகவல் தரலாம் அல்லது தபால் மூலம் இல.15, மெமோறியல் ஒழுங்கை, மானிப்பாய் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்.

- கிறிஸ்ரியன் லியோ-



SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்
ENGLISH MEDIUM
GR6 TO11
- SCIENCE S.GOBINATH
- MATHS W.NANTHY
- HISTORY J.WALWIN S.MAYOORAN
- ENGLISH K.JEYAKUMAR A.T.MUTHU
I.C.T- D.SHELTON



மனோதத்துவ வைத்தியம்
(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளார். சகலவிதமான நோய்களிலிருந்தும் குணமடைய பிரபல வைத்திய நிபுணரைச் சந்தியுங்கள்.

இல. 12. சிவகுருநாதர் லேன்,
Expo முன்ஒழுங்கை, யாழ்ப்பாணம்,
தொ.பே 0719315664, 021 222 2330
(யாழ்.றோட்டறிக் கழக கேட்போர் கூடம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

## பொலிஸ் அதிகாரங்களை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையில் பொலிஸ் அதிகாரத்தைப் பரவலாக்கும் அம்சமும் இடம் பெற்றுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டுள்ள சில அம்சங்கள் உத்தியோகபூர்வமற்ற முறையில் வெளியாகியுள்ளன.

* பொதுவாக பொலிஸ் சேவையில் பணிப்பாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்படுவார். அவருக்கு கீழ் இரண்டு பொலிஸ்மா அதிபர்கள் நியமிக்கப்படுவார்கள். ஒருவர் மாகாண பொலிஸ் விவகாரங்களை ஆராயவும் மற்றவர் தேசிய பொலிஸ் விவகாரங்களை ஆராயவும் நியமிக்கப்படுவர்.

மாகாண மட்டத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களும் அதற்குக் கீழ்ப்பட்டவர்களும் நியமிக்கப்படுவார்கள். தேசிய மட்டத்தில் அதற்கு ஏற்றவாறு நியமனங்கள் அமையும். மாகாணங்களுக்குத் தனித்தனியாக பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் நேரடியாக முதலமைச்சர்களின் கீழ் வருவார்கள்,

மாகாண மட்டத்தில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் மத்திய அரசின் கீழான பொலிஸார் தலையிடுவர்.

* அரசமைப்பு நீதிமன்றம் ஊடாகவே அரசமைப்பு தொடர்புபட்ட விடயங்கள் ஆராயப்படும்.

* நீர் மற்றும் காணி விவகாரம் தொடர்பில் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும். தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் காணி மற்றும் நீர் விவகாரம் தொடர்பில் இந்த ஆணைக்குழு பரிந்துரைகளைச் செய்யும்.

* செனட் சபை ஒன்றும் அமைக்கப்பட பிரேரிக்கப்பட்டுள்ளது. அதாவது மாகாணம் ஒன்றில் நான்கு உறுப்பினர்கள் வீதம் 36 உறுப்பினர்கள் செனட் சபைக்கு நியமிக்கப்படுவார்கள்.

* நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் உள்ள அதிகாரங்களைக் குறைப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாரம் நேரம் ஒதுக்கித்தந்தால், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு தயாரித்துள்ள தீர்வு யோசனையை அவரிடம் சமர்ப்பிக்க முடியும். ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பத்தை நாம் கோரியுள்ளோம் என்று சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனைத்திட்டத்தை ஜனாதிபதியிடம் கையளிப்பது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்ததாவது:

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத்திட்டத்தைத் தயாரிக்கும் நோக்கில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டது. தற்போது 13 அரசியல் கட்சிகள் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கின்றன. இந்நிலையில் அரசியல் தீர்வுத்திட்டத்தை தயாரிக்கும். பணிகள் நிறைவுபெற்றுள்ளன.

பொதுவாக அனைத்து விடயங்களிலும் 13 அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகள் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். இந்நிலையில் எமது யோசனையைத் தயாரித்துள்ளோம். அதனை ஜனாதிபதியிடம் கையளிப்பதே எஞ்சியுள்ள அலுவலாகும்.

எனினும் நாங்கள் தயாரித்துள்ள தீர்வுத்திட்டத்தில் 13 அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகள் இதுவரை கையொப்பம் இடவில்லை. ஆனால் தீர்வுத்திட்டத்தை ஜனாதிபதியிடம் ஒப்படைப்பதுடன் ஜனாதிபதியின் அபிப்பிராயத்தைக் கேட்ட பின்னர் கையொப்பம் இடலாம் என்ற நிலைப்பாட்டில் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

எனவே தீர்வுத்திட்டத்தை கையளிப்பதற்கு நாங்கள் ஜனாதிபதியை சந்திப்பதற்கான சந்தர்ப்பத்தை கோரியுள்ளோம். இவ்வாரம் ஜனாதிபதி நேரம் ஒதுக்கித் தந்தால் தீர்வு யோசனையை ஜனாதிபதியிடம் கையளிப்போம். அதன் பின்னர் ஏனைய கட்சிகளின் யோசனைகள் கோரப்படும்- என்றார்.

(அ-1)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப் பயன்படுத்தப்படும் 10 கிலோ எடை கொண்ட தற்கொலை அங்கியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்றும் குணசேகர கூறியுள்ளார்.

இதனைத் தவிர தொடர்புசாதனக் கருவிகளும் கைப்பற்றபட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டவர் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினர் எனவும் அவர் தற்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் ரஞ்சித் குணசேகர மேலும் கூறியுள்ளார். (அ-சி)

## புலிகளின் வான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளனர்.

அதனடிப்படையில் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படுவோருடன் தங்கியுள்ள, புலிகளின் சில விமானிகளைக் கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள புலிகளின் வான்படைப் பிரிவின் தலைவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், அவரின் பெயர் உள்ளிட்ட தகவல்களை வழங்க முடியாதுஎனவும்பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(அ-சி)

## திஸ்ஸ விதாரண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு தேசிய நூலக ஆவண வாக்கல் கேட்போர் கூடத்தில் இன்று நடைபெற்ற தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அதன் தலைவர் டாக்டர் குணதாச அமர சேகர இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் அதன் உளவுப்படையான றோவுக்கும் மேற்குலக நாடுகள் மற்றும் தமிழ் இனவாதிகளுக்குமே அரசியல் தீர்வு தேவைப்படுகிறது அவர்களைத் தவிர தமிழ் மக்கள் அதனைக் கேட்கவில்லை என்றும் அவர் கூறினார்.

## ஜீ-15 மாநாட்டின் தலைமைப்பதவி இலங்கைக்கு

கொழும்பு, ஜூலை 29

நடைபெறவுள்ள ஜீ-15 சர்வதேச மாநாட்டின் தலைமைப்பதவி இந்த முறை இலங்கைக்குக்கிடைத்துள்ளது.

அபிவிருத்தி அடைந்துவரும்18 நாடுகள் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்ட இந்த ஜீ-15 நாடுகளின் கூட்டமைப்பின் நோக்கம் அபிவிருத்திக்கான முதலீடு, வர்த்தக பரிமாற்றம் என்பவற்றை ஊக்குவித்தலாகும்.

இந்த அமைப்பு 1989ஆம் ஆண்டு தொடக்கம் செயற்பட்டு வருகிறது. ஜீ-15 மாநாட்டுக்கு இலங்கை தலைமைத்துவம் வகிக்கும் காலத்தில் அதற்கான பிரதிநிதியாக கலாநிதி தயான் ஜெயதிலக செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## சென்னையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிக்கொண்டிருந்த வேளையிலேயே இலங்கைத் துணைத்தூதர் குழுவொன்றினால் வழிமறிக்கப்பட்டு அவரது வாகனம் தடுத்து நிறுத்தப்பட்டது.

அக்குழுவினர் அவருக்கு எதிராக கோசங்களை எழுப்பி வாகனத்தில் தட்டி கூச்சலிட்டனர். எனினும் விருந்துபசாரத்தை ஏற்பாடு செய்தவர்கள் விடய மறிந்து சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று துணைத்தூதர் ஹம்சாவிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் வழியனுப்பிவைத்தனர்.

துணைத்தூதரின் வாகனத்தை மறித்து தொந்தரவுசெய்தவர்களில் பெண்களும் அடங்குவர். அவர்கள் ஹம்சாவின் சமீப கால நடவடிக்கைகளை எதிர்த்து கோசமிட்டனர் எனவும் அவருடைய வாகனத்தை நொருக்க முனைந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

துணைத்தூதுவர் ஹம்சாவின் செயற்பாடுகள் அண்மைக்காலமாக தமிழர் நலனிற்கு விரோதமாக அமைந்ததாக ஏற்கனவே தமிழகத்தின் பல்வேறு அமைப்புகளால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. (அ-7)

## கரைச்சி,.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள முழங்காவில், நாச்சிக்குடா ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் சேர்ந்தோர் அனேகமாக அடுத்த மாத நடுப்பகுதியில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்- என்று கிளிநொச்சி அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

மீளக்குடியமர்த்தப்பட்டவர்கள் மருத்துவ தேவைகள், பொருள்கள் கொள்வனவுகள் உள்ளிட்ட சுயதேவைகளுக்காக வவுனியா சென்று வருவதற்குப் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும்.இதற்காக வீதிகள், முக்கிய சேவை நிலையங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. அவர்களுக்கான நிவாரண உணவுப் பொருள்கள் விநியோகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் மூலமாகவே மேற்கொள்ளப்படும்- என்றும் அரச அதிபர் நா.வேதநாயகன் மேலும் தெரிவித்தார்.

(அ-7)

## வெங்காய இறக்குமதிக்கு மீண்டும் வரிவிதிப்பு

கொழும்பு, ஜூலை 29

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்துக்கு மீண்டும் வரி அறவிடப்படவுள்ளது. ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்துக்கு 25 ரூபா வீதம் வரி அறவிடப்படவுள்ளது என்று வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உள்ளூரில் பெரிய வெங்காய உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காகவே இந்த நடைமுறை கொண்டுவரப்படுகிறது. உள்ளூரில் பெரிய வெங்காய அறுவடைக்காலத்தில் வெளிநாட்டிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்படுவதால் உள்ளூர் வெங்காய உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனாலேயே இறக்குமதிக்கு வரி அறவிடப்படவுள்ளது என்று அமைச்சர் மேலும் சொன்னார். (அ-7)

## நல்லூர்க் கந்தன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைத்தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது.

ஆலயத் திருவிழாக்களில் பங்குபற்றும் பக்தர்களின் நலன் கருதி படைத்தரப்பினர் இந்த வசதியை செய்துள்ளனர் என்றும்-

ஆலயத்தின் முக்கிய திருவிழாக்களுக்கு ஊரடங்கைத் தளர்த்தும் தேவை உண்டு என ஆலய நிர்வாகம் கோரிக்கை விடுத்தால் அந்த நாள்களில் இரவு ஊரடங்கு முழுமையாகத் தளர்த்த ஏற்பாடு செய்யப்படும் என்றும் பலாலிப் படைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது. (அ-1)

## வன்னி அகதிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ள இந்தப் பதில் மனுவிலேயே மேற்படி அகதிகள் அவசரகால விதிகளின் கீழான தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இரண்டு லட்சத்து 62' ஆயிரத்து 585 பேர் இந்த முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களுள் சுமார் எட்டாயிரம் பேர் புலிகளின் தீவிர உறுப்பினர்கள் எனப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்றும் இந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

''இந்த மக்களை அவரவர்களது இடங்களில் சுதந்திரமாக வாழத் தக்கவர்களாக மீளக் குடியமர்த்துவதே அரசின் திட்டம். கூடிய சீக்கிரத்தில் அவர்களை மீளக்குடியேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அப்பிரதேசங்களில் கண்ணிவெடிகள் பரவலாகப் புதைக்கப்பட்டுள்ளன. அவற்றை அகற்ற வேண்டியுள்ளது. பெருமளவு பயங்கர ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிய வருகிறது. அவற்றையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. அந்த வேலைகள் பூர்த்தியானதும் இவர்கள் மீளக் குடியமர்த்தப்படுவர்.

எனவே, அகதிகளைக் கட்டுப்படுத்தி வைக்கும் இந்த நடவடிக்கைக்கு எதிராக சட்டச் செயற்பாடு எதையும் முன்னெடுக்க முடியாது. ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடி செய்யுமாறு கோருகின்றோம்.''

- இவ்வாறு சட்டமா அதிபர் தமது பதில் மனுவில் குறிப்பிட்டிருக்கின்றார் என அறிய வந்தது. (சி)

## மரண அறிவித்தல்

### திருமதி சாந்தகுமாரி விக்னராசா

(சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கிலத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)



திருமதி சாந்தகுமாரி விக்னராசா நேற்று (28.07.2009) செவ்வாய்க்கிழமை மாலை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் இ.த.விக்னராசா (மேல் நீதிமன்ற நீதிபதி, யாழ்.மாவட்டம்) அவர்களின் அன்பு மனைவியும் சங்கீதா (U.K), சவீந்திரா (U.K), சஞ்சேந்திரா (சட்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயசங்கரின் (U.K) அன்பு மாமியாரும் செல்வன் உதேசனின் (Timy) அம்மம்மாவும் காலஞ்சென்ற திரு.திருமதி J.P.இராசதுரை தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி இராமசாமி தம்பையா தம்பதியினரின் அருமை மருமகளும் காலஞ்சென்ற வால்ரர் பாலகிருஸ்ணன் மற்றும் இராசதுரை, தாமரைகுமார், அரசகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வு பற்றிப் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இல.1, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். 021 222 2361, 021 222 9709.

இ.த.விக்னராசா (கணவர்) (மேல் நீதிமன்ற நீதிபதி, யாழ்ப்பாணம்).


கற்சுமியின் புதிய வெளியீடு
★ தரம் 3,4,5 மாணவர்களுக்குரிய "தமிழ் அடிப்படை இலக்கணம்"
★ தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு மிகமிக பயன் உடையது.
★ தரம் 6,7,8 மெல்லக் கற்கும் மாணவர்களுக்கும் ஏற்றது.
★ பரீட்சைக்குச் செல்லும் போதே பாடமாக்கிச் செல்லக்கூடிய இலகு நடை.
உங்கள் பிள்ளையின் இலக்கணப் பிரச்சினைக்கு FULL STOP!
கற்சுமி கல்வி நிறுவனம்
166,நாவலர் வீதி ,யாழ். 222 7442

விற்பனையாகின்றது
விசாகா கல்லூரியின் PHYSICS.
இறுதி பரீட்சை வினாத்தாள் விற்பனையாகிறது
கிடைக்கும் இடம்
பூபாலசிங்கம் புத்தகசாலை,
அன்னை புத்தகசாலை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கமநல போட்டிப் பரீட்சைக்கான விசேட வகுப்புக்கள்
கணக்கீடு
J.T.அழகன் (B.Com (Accspl), H.N. Dip. in Acc)
கிரகித்தல்
P.கமல்தாசன்
ஆரம்பம் - 29.07.2009 (1.30 p.m.)
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கமநல போட்டிப் பரீட்சைக்கான விசேட வழிகாட்டல் வகுப்புக்கள்
கணக்கீடு
P.ரகீரதன் B.B.A. (Fm Spl)
கிரகித்தல்
P.கமல்தாசன்
ஆரம்பம்:- 29.07.2009 (1.30 p.m.)
NEC
Clock Tower Road, Jaffna
பெருமாள் கோவிலடி அருகில்

Spoken English With Grammar
சனி, ஞாயிறு புதிய பிரிவு
ஆரம்பம்:- 01.08.2009 4 - 5 P.M. (சனி)
G.A.Q, B.A. Grammar & Model Papers Practices
ஆரம்பம்:- 01.08.2009 5 - 6 P.M. (சனி)
By: P.Ainkaran B.A. (Hons) HN Dip. in Eng
"தாய்மனை", வன்னியசிங்கம் வீதி, இணுவில்.

விற்பனையாகிறது
01.08.2009 சனிக்கிழமை நடைபெறவுள்ள கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான போட்டிப் பரீட்சை கை நூல்.
தொகுப்பு:- பி.கமல்தாஸ்
பி.அழகன்
பூபாலசிங்கம் புத்தகசாலை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை,
நல்லூர் உற்சவ கால சிறப்பு விற்பனை நிலையம், நல்லூர்.

LANKA BELL லங்கா பெல் சிடிஎம்ஏ (CDMA) LANKA BELL
• இலங்கையில் ஆகக் குறைந்த தொலைபேசிக் கட்டணங்கள்
• உள்வரும் அழைப்புக்கள் முற்றிலும் இலவசம்
• வெளிநாட்டு அழைப்புக்களுக்கு நிமிடத்துக்கு 7/- மட்டும்
• உள்வரும் வெளிநாட்டு அழைப்புக்களுக்கு நிமிடத்திற்கு 50 சதம் வழங்கப்படும்
உங்கள் இடங்களிலேயே பெற்றுக் கொள்ள உடன் அழையுங்கள்
021 222 8032 , 077 6473706
யாழ் மாவட்ட முகவர்: அஸ்வினி மல்ரி பிளாசா


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org